உ



அமரர்

# திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா

அவர்கள் சிவப்பேறடைந்த 31ஆம் நாள்

# நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் பிறப்பிடமாகவும்
அர்ப்பணித்து எங்களை வாழவைத்து
என்றும் எங்கள் இதயங்களுடன் கலந்து
உறவாடி, வழிகாட்டி, நல்லவற்றையே நினைத்து
நீதி தவறாமல் வாழ்ந்து எமது வாழ்வின்
முழுமைக்கு வித்தாக நின்று
தெய்வத்துள் தெய்வமாக சங்கமித்து
நிலையான அழிவில்லாப் பெருவாழ்வு பெற்ற
**அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா**
அவர்களின் ஆத்மா இறைவன் திருவடியில்
நிலைத்திருக்கவேண்டி
இம் 31 ஆம் நாள் நினைவுமலரை
அவர்தம் பாதங்களுக்கு எமது கண்ணீர்ப்
பூக்களுடன் சமர்ப்பணம் செய்கின்றோம்

- குடும்பத்தினர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமரர்

# திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா

## திதிவெண்பா

ஆண்டுவரு சோபகிருது ஆனவைகாசி இருபத்தியேழில்
பூண்டுவரு சனிவாரம் புனித அபர ஸப்தமியில்-ஆண்டிருந்த
புனிதமகள் சின்னப்பிள்ளை புவியைவிட்டுத் திருமுருகன்
புனித கழல் சென்றடைந்தாள்

மண்ணில்
08.12.1935

விண்ணில்
10.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம் :

கருவுற்ற நாள் முதலாகவுன் பாதமே காண்பதற்கு
உருகுற் றென் உள்ளம் நானும் கிடந்தலத் தெய்தொழிதேன்
திரு வொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒரு பற்றியாமையும் கண்டிரங்காம் கச்சியே கம்பனே.

### திருவாசகம் :

பாரோடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுந் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரியாயோ.

### திருவிசைப்பா :

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணர்க் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோவில்
யோகநாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் நானே.

### திருப்பல்லாண்டு:

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**பெரியபுராணம் :**

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

**திருப்புகழ் :**

பக்தியால் யானுமைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனாய் மாறு என்னைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமமான் சற்குண நெயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

வாழ்த்து :

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

"குட்பை தனிந்து ஒழிய புள்பறந்தன்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை முட்டைக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பு போன்று முட்டையிலிருந்து குஞ்சு வெளியேறி பறப்பது போன்றது. உடலில் இருந்து உயிர் பிரிவது அந்த வகையில் தான் எமது உடலும் உயிரும் அப்படி வாழ்வதுதான் வாழ்க்கை.

அப்படி வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவம் அடைந்த தியாகராசா சின்னப்பிள்ளை ஆசிரியை தேற்றாத்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். தியாகராசா ஆசிரியரை கரம்பிடித்து முருகவடிவேல் என்னும் ஆண் குழந்தையை ஈன்று இல்லறமே நல்லறமாக வாழும் காலம் ஆன்மீகத் தொண்டுகள் புரியும் காலம் பல ஆலயங்களில் திருமுறைகள் பாடுவதிலும் புராண இதிகாசங்கள் பாடி பொருள் கூறுவதிலும் தேர்ச்சி பெற்றவர். பண்ணோடும் இசையோடும் பாடும் போது கேட்பவர்களுக்கு இனிமையாய் இருக்கும். கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பல தடவைகள் கேட்டு மகிழ்ந்துள்ளேன். அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி எல்லாம்வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

## சிவஸ்ரீ சோதிலிங்கம் குருக்கள்

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா அவர்களின்
# வாழ்வியல் தடயங்கள்

சைவமும் தமிழும் கலையும் தழைத்து நின்று தற்பெருமை காக்கும் தேற்றாத்தீவில் திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா (மாரிமுத்தக்கா) கந்தப்பன் மாணிக்கப்பிள்ளை தம்பதிக்கு இளைய மகளாகப் பிறந்தார். இதனாலன்றோ இவருக்கு சின்னப்பிள்ளை எனப் பெயர் வைத்தனர்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் கந்தப் பெருமாள், ஓய்வு பெற்ற அதிபர் சின்னத்தம்பி, கண்ணம்மை, பார்வதிப்பிள்ளை, நல்லம்மா சகோதரர்களுடன் இளையவளாக உடன் பிறந்த இவர் பல துறைகளிலும் சிறப்பாக பங்கு பெற்று செயற்படும் ஒரு செயற்பாட்டாளராக துலங்கினார்.

தனது பத்தாவது வயதில் திடீரென ஒரு நாள் தனக்கு சமைத்து தரும் பார்வதி அக்கா மற்றும் அம்மாவிடம் வந்து இன்று முதல் நான் மரக்கறி உணவு மட்டும் தான் உண்பேன் வேறு புதிய பானை சட்டிகள் பாத்திரங்கள் அகப்பை என்பவற்றை எடுத்து சமைத்து தர வேண்டும் என கட்டளையாக பணித்தார். அன்று முதல் அவரது மரணம் வரை அவர் தூய்மையான உணவு உண்டே தன் ஆயுளை பூர்த்தி செய்தார்.

இளமைக்காலத்தில் கல்வியில் சிறப்புத் தேர்ச்சிகளைக் கொண்ட இவர் தேற்றாத்தீவு றோமன் கந்தோலிக்கப் பாடசாலையில் (இன்றைய மகா வித்தியாலயம்) கல்வி கற்றார். இவர் காலத்தில் இருந்த கணபதிப்பிள்ளை அதிபரின் வழிகாட்டலின் கீழ் க.பொ.த. சாதாரண பரிட்சையில் சித்தி அடைந்த பின்னர் தனது 24-வது வயதில் ஆசிரியர் நியமனம் பெறும் வரை மாதர் சங்கத் தலைவியாகவும், ஏனைய கிராம அபிவிருத்தி நிறுவகங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

17.10.1960 இல் ஆசிரிய நியமனம் பெற்று மட்/மாவடிவேம்பு அ.த.க. பாடசாலையில் 05.01.1963 வரை சேவையாற்றினார். 06.01.1963 முதல் 3.12.1964 வரையான காலப் பகுதியில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சி காலாசாலையில் பயிற்சியைப் பெற்றார். இவரது கலாசாலை அதிபராக வீ.சி.கந்தையா பண்டிதர், திருமதி.கங்கேஸ்வரி கந்தையா ஆகியோரை தனது மானசீக குருவாக ஏற்றுக்கொண்டு அவர்கள் வழிகாட்டலில் சைவத்திலும் தமிழிலும் தேர்ச்சியும் பயிற்சியும்


noolaham.org | aavanaham.org

பெற்ற இவர் கலாசாலையில் நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் "கடவுள் என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை பிரபல்யமாக பேசப்பட்டதுடன் சிறந்த பாராட்டையும் பெற்றது. அத்தோடு கலாசாலையில் ஆசிரிய மாணவர் சங்கத் தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தலைமைத்துவம் உடையவராகவும் திகழ்ந்தார். கலாசாலைப் பயிற்சியை நிறைவு செய்த அவர் சேவையாற்றிய பாடசாலைகளின் விவரம் பின்வருமாறு காணப்பட்டது.

01.01.1965 - 24.04.195 வரை மட்/களுவாஞ்சிகுடி அ.த.க. பாடசாலை
25.01.1965 - 17.04.1969 வரை மட்/தேற்றாத்தீவு அ.த.க. பாடசாலை
18.04.1969 - 28.02.1972 வரை மட்/முனைத்தீவு அ.த.க. பாடசாலை
01.03.1973 - 18.03.1973 வரை மட்/அம்பிளாந்துறை றோ.க. பாடசாலை
19.03.1973 - 31.12.1874 வரை மட்/மாங்காடு றோ.க. பாடசாலை
01.01.1967 - 01.01.1991 வரை மட்/தேற்றாத்தீவு அ.த.க. பாடசாலை
என்பவற்றில் தனது ஆசிரியப் பணியை நிறைவு செய்தார்.

இவ்வாறு தனது ஆசிரியர் பணி செய்யும் காலங்களில் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுறுதி கொண்ட இவர் தான் ஒரு உண்மையான சைவசமயியாக வாழ்ந்தார். இச் சந்தர்ப்பத்தில் அம்பிளாந்துறை பாடசாலையில் கற்பித்த காலத்திலே கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி தியாகராசா ஆசிரியரை களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் சந்நிதியில் 1973.08.24ந் திகதி திருமண மாங்கல்யம் செய்து கொண்டார். இனிதே நிறைவேறிய இல்லற வாழ்வில் முதல் குழந்தையாக பெண் பிள்ளையைப் பெற்ற பின் நான்கு மாத முடிவில் வடிவாம்பிகை எனும் பெயர் கொண்ட அக்குழந்தை இயற்கையடைந்ததைத் தொடர்ந்து ஆண் குழந்தையான முருகவடிவேல் 1977.12.30ந் திகதி பிறந்து இன்று வரை அவரது ஆசை மகனாகவும் உள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் தான் பெற்ற தீட்சை விதிகளை கடைப்பிடித்து வாழ்ந்தார். தினமும் அதிகாலை எழுந்து தனது வீட்டு வேலைகளை முடித்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து வண்டுகள் பூச்சிகள் பூக்களில் அமருமுன் அவற்றைப் பறித்து கொண்டு வந்து தீட்சா விதிப்படி அனுட்டானம் செய்து பஞ்சதோத்திரம் பாடி இறைவனைப் பூஜித்த பின்னரே புதிய உணவு சமைத்து உண்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாட்டை தொடர்ந்து மேற்கொள்ளும் இவர் வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ பாலமுருகன் ஆலய பஜனை நிகழ்வுகளிலும், பூஜையிலும் தோத்திரம் பாடி வணங்குவார். செவ்வாய்க்கிழமைகளில் கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயம் சென்று வழிபடுவார். இவற்றோடு ஆலயங்களில் நடைபெறும் அனைத்து விசேட சமய நிகழ்ச்சிகளிலும் கதை காலாட்சபம், பேச்சு, திருமுறை ஓதல், விநாயகர் காப்பு என்பவற்றைப் பாடுவதிலும் எமது சமய தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் ஆன்மீகக் கோட்பாடுகளையும் தெளிவு படுத்துவதிலும், விவாதிப்பதிலும் அவருக்கு நிகர் அவரே என்றால் அது மிகையாகாது. சைவ சமய அனுட்டானங்களையும், விரதங்களையும் தன் வாழ்நாள் முழுவதும் முறையாக அனுஷ்டித்த பெருமை இவரையே சாரும்.

மேலும் இவர் தன் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் அறநெறி பாடசாலையில் சமய விழுமியங்கள், கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்வியல் கோலங்களையெல்லாம் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்று கற்றுக் கொடுத்தார். இதனாலன்றோ தேற்றாத்தீவு விபுலானந்தா கலாசார பொதுப்பணி மன்றம் அறநெறி பாடசாலையில் சைவப் பெருந்தகை என்ற பட்டமளித்து பொன்னாடை போர்த்தி 19.05.2022 இல் நினைவுச் சின்னம் ஒன்றை பரிசளித்து கௌரவித்தது. இக்கால பகுதியில் ஸ்ரீ ரமண மகரிஷி வழியை பின்பற்றி ரமணாச்சிரமங்களில் தன் தடயத்தை பதித்து வந்தார்.

மேலும் 2017 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தினத்தில் ம.தெ.எ.பற்று பிரதேச சபையால் சிறந்த பெண்மணி என்ற விருதையும் வாழ்த்து மடல் ஒன்றையும், பொன்னாடையும் போர்த்தி 08.03.2018 வழங்கி வைத்தமை இவரது பெருமையை புடம் போட்டுக்காட்டும்.

இதனைத் தொடர்ந்து தேற்றத்தீவு மகா வித்தியாலய வளர்ச்சிக்கு தடையாக இருந்த நிலப்பற்றாக் குறையை நீக்குமுகமாக பாடசாலைக்குத் தேவையான நிலப்பரப்பு முழுவதையும் வழங்கினார். பாடசாலை உள்ளவரை திருமதி சின்னப்பிள்ளை தியாகராசாவை கல்வி உலகம் மறக்காது என்பது திண்ணம். இந்நிகழ்வை கௌரவிக்க மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கருணாகரன் அவர்களால் இவரை கௌரவித்த நிகழ்வு மிக விமரிசையாக நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளை ஓதுவதிலும் அவற்றிற்கான பொருளையும், கருத்தையும், பாடப்பட்ட சந்தர்ப்பங்களையும் மிக இலகுவான மொழிநடையில் தெளிவுப்படுத்துவதில் மிகவும் வல்லவரான இவர் தேவார முதலிகளையும் பன்னிரு திருமுறைகளையும் பாடியோரைக் கனம் பண்ணுவதிலும், குருபூசை தினங்களைத் தவறவிடாது ஆலயம் சென்று திருமுறை ஓதுவதிலும் விரத காலங்களில் விநாயகர் கதை, கந்தபுராணம் பாடுவதிலும் சமய கதைகளை கூறுவதிலும் ஓயாமல் சளைக்காமல் திகழ்வார்.

சமய போதனைகளிலும் வழிபாட்டிலும் ஈடுபடும் இவரை கல்முனை நால்வர் கோட்டம் அறப்பணி மன்றம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது. தொடர்ச்சியான இவரது சமயப் பணிகளை கௌரவிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இவ்வாறு தன் வாழ்நாள் முழுவதும் ஆசிரியப் பணியும், அறநெறிப் பணியும், தான் சார்ந்தோருடனான அன்பு பணியும், ஆலோசனையும் வழங்குவதோடு சிறந்த பேச்சாளராகவும், விவாதிப்பவராகவும், தனக்குச் சரி என்று தோன்றுவதை விடாப்பிடியாகவும் அமல்படுத்தி வாழ்ந்து வந்தார்.

தன் ஆசை மகன் முருகவடிவேல் மனைவி பேரப்பிள்ளை களுடன் கொஞ்சிக் கரம் குவித்து வாழ்ந்த நாளில் இயற்கையின் மூப்பும் முடிவும் 10.06.2023 சனிக்கிழமை தன் 89 ஆவது வயதில் சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா இறைபதம் அடைந்து சாந்தி பெற வணங்கி

"மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
மன்னிப்பதால் பல உள்ளங்கள் தேறும்
மறப்பது மனித சுபாவங்கள் ஆகும்

வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதையொன்று வீழ்ந்திடில் செடிவந்து சேரும்
சேர்ந்தது எது உறவுகள் என்றும்
சேர்ப்பது இறைசெயல் என்பதை ஏற்போம்

## முருகவடிவேல் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப்பிள்ளை தியாகராசா
# ஓர் தெய்வப்பிறவி

அரிது அரிது மானிடராதல் அரிது என்கின்றார் ஔவை பிராட்டியார். அந்த ஔவையாரைப் போன்று சைவ சமயத்திலே ஊறிய ஒருவராகவும், ஆளுமைப் பண்புகள் நிறைந்த ஒருவராகவும் திகழ்ந்தவர் திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா அவர்களாவார்.

இவர் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர குருக்களினால் தீட்சை வழங்கப் பெற்றவராவார். 1991 ஆம் ஆண்டு முதல் மாரிமுத்து அக்காவுடன் பழக்கமுள்ளவன் நான். அவர்களது வீட்டில் அம்மாளுக்கு செய்வதென்றால் மிகவும் கோலாகலமாக இருக்கும். ஆரம்ப காலங்களில் வெல்லாவெளி மாரியம்மன் ஆலய பூசகர் மானாகப்போடி அவர்கள்தான் அவர்கள் வீட்டில் அம்மாளுக்குச் செய்வது வழக்கம். அவருக்குப் பின் நானும் அம்மாளுக்குச் செய்திருக்கிறேன்.

மாரிமுத்தக்கா மரணிக்கும் காலம்வரை தெய்வ சிந்தனையிலேயே இருந்துள்ளமையினைக் காணலாம். அவரது வாழ்வில் பெரும்பகுதி தனிமையை கொண்டதாக அமைந்த போதிலும் அவர் தம் தனிமையை போக்குவதற்காக புத்தகங்களை வாசிப்பதனை வழக்கமாக்கிக் கொண்டவர். அவரது வீட்டிற்கு எப்போது சென்றாலும் ஏதாவது ஒரு புத்தகத்துடனே காணப்படுவார். பஞ்சாங்கம் பார்ப்பவர் என்பதால் நல்ல நாள் பார்ப்பதற்காக பலரும் அவர்கள் வீட்டிற்கு வந்து போவார்கள்.

ஆலயங்கள் தோறும் பஞ்சபுராணம் பாடுவதில் சிறந்தவர். இயலாமை காரணமாக பஞ்ச புராணத்தை நின்று பாடுவதற்கு முடியாத போதிலும்கூட உட்கார்ந்த வண்ணம் பாடிவந்தவர்.

அம்மை நோய் ஏற்படும் வீடுகளுக்குச் சென்று ஓதி இறக்குவதோடு தண்ணீர் ஓதி கொடுத்து நோயை குணப்படுத்தியவர். சமய ரீதியாக பல கருத்துக்களை கூறுவதுடன் நில்லாது அதன்படி வாழ்ந்து காட்டிய உத்தமியாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் தேவாரப் பாராயணம், ஏடு படித்தல், நற்சிந்தனை கூறுதல் ஆகியவற்றுக்கும் அப்பால் ஆலய கிரியைகள் தொடர்பாகவும் தமது ஆழ்ந்த புலமையை வளர்த்துக் கொண்டவராவார். சமய ரீதியில் எமக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைக்கும் ஒருவராக திகழ்ந்தமையால் தெய்வீக நிலையில் வைத்து போற்றப்படக் கூடியவர் ஆவார்.

அனைவரையும் வழிநடத்தக்கூடிய ஆற்றல் மிக்கவர் எனினும் பிடிவாத குணம் உடையவராகவும் இருந்தார். பல ஆலயங்களுக்கும் நான் அவரை அழைத்துச் சென்றுள்ளேன். குருமார்களின் ஆசிர்வாதம் நிரம்பப்பெற்றவர் இவர். இத்தகைய ஒருவரை காண்பது அரிது. எனவே இவரது ஆளுமைப் பண்புகளை எதிர்கால சந்ததியினர் அவசியம் கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.

இவரது ஆத்மா இறைவன் திருவடியில் நிரந்தரமாக இணைந்திருக்க வேண்டும் எனவும், நமது குடும்பத்திற்கு தோன்றாத் துணையாக இருந்து குடும்பத்தை வழிநடத்த வேண்டும் எனவும் எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

## சிவஸ்ரீ கு.தேவராசாக் குருக்கள்

பிரதம குரு - ஸ்ரீ பாலமுருகன் ஆலயம் - தேற்றாத்தீவு,
கண்ணகையம்மன் ஆலயம் - செட்டிபாளையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவல்

தெய்வநெறித் திருப்பதிகள் சூழும்
மெய்யன்பர் வாழும் தேற்றாவூர் திருப்பதியில்
வாழும் வகை எல்லாம் வடிவமுறு செயலாக்கி
ஆளும் தகைமையராம் அணிமணியாய்ப் பெற்றிருந்த
மாரிமுத்து என்று மக்கள் உளம் விரும்பி அழைக்கும்
சீர் மிகுந்த சின்னப்பிள்ளை தெய்வமகள்
தான்தோன்றி அய்யன் தனித்துவம் சேர் சோலையூரில்
மண் தோன்றி அவதரித்த தியாகராஜா ஆசான்
கரம் பிடித்து கனிவுடனே வாழும் வகை கண்டாள்
பரம்பொருளின் பதம் பிடித்து பல ஆண்டாய் மகவு இன்றி
தவங்கள் பல செய்து தனி நோன்பு கடைப்பிடித்து
தவத்தின் பயனாய் தனிமகனாய் முருக வடிவேல் தோன்றினான்
துன்பங்கள் பல கண்டு சோதனையும் வேதனையும் அணியாய்
பன்முகமாய் பல கண்ட அருள்த்தாய் சின்னப்பிள்ளை
ஆலயங்கள் பல தந்து இறை அடிமலரைப் போற்றி செய்து
ஆலயத்தைத் தனக்குள்ளாக்கி ஆறுமுகனை தினமும் பாடிப்பணிந்து
நண்பர்களுக்கும் அணைத்திருந்த உற்றார் உறவினர்களுக்கும்
தன் கடமை மறவாது தனித்துவமாய் பல செய்து
தேற்றாவூர் மண்ணில் தெய்வவழி கண்ட மகள்
பற்ற உலகை விட்டகல மகன் கதற மருமகள் பேரர் முதல்
உற்றார் எல்லாம் உளம் உடைந்து உன் பிரிவால் ஏக்க முற்றார்
ஆசிரியர் பெருந்தகையே !
மாணவச் செல்வங்கள் மாண்புறவே நீர்வடித்து
கணவருடன் நீயும் கனிவுடனே வழிகாட்டி வழிசமைத்தீர்
இதை எல்லாம் மறவாத மக்கள் உளம்பரிதவித்துத் துடிக்கின்ற
பதை பதைத்துக் கதறி அழும் மக்கள் முகம் நோக்காது
தேற்றாவூர் பாலமுருகன் திருவடிக்கே சென்றடைந்த
ஊற்றாக உணர்வாக உயிராக இருந்த
மாற்றுக் குறையா உன் கணவன் வழி நடந்தாய்
பண்டைய நாட்களில் போரதீவு மண்ணில்
ஆண்டிருந்த காளிபதம் அனுதினமும் வழிபட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியருளால் சோதனைகள் பல வென்று சுயமாகச் சுகமானாய்
வாழி எனச் சொல்லி வல்லவியாள் உனை வாழ்த்துவாள்
சின்னப்பிள்ளை என்னும் தெய்வமகள் மாரிமுத்து
மண்ணுக்குள் மறைந்தாலும் மனம் விட்டு அகலாது
கண்ணுக்குள் இருந்து காத்திடுவாய் தினம்
உன் ஆத்மா சாந்தியுற இதயமுறப் போற்றுகின்றேன்.

அருட்கவியரசு விஸ்வப்பிரமம்

**வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்**

ஸ்ரீ காளிபுரம், பெரியபோரதீவு.



[illegible] தென் எருவில் பற்று பிரதேச செயலகம்
நடாத்தும்
சர்வதேச மகளிர் தினம் - 2018
சிறந்த பெண்மணிக்கான விருது

நிலை பேறான சமூக அபிவிருத்திக்கு
அர்ப்பணிப்பான சேவையினை
வழங்கியமையினை கௌரவித்து
தேற்றாத்தீவு - வடக்கை
சேர்ந்த

**திருமதி. சின்னப்பிள்ளை தியாகராஜா**

அவர்களுக்கு 2017ம் ஆண்டுக்கான
சிறந்த பெண்மணி விருதினை
மண்முனை தென் எருவில் பற்று
பிரதேச செயலகம்
08.03.2018ம் திகதி அன்று
வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலோகத்தில் அமர்ந்திருந்து எனை ஆசீர்வதிப்பாய் அம்மா

பெற்றெடுத்த நாள் முதலாய் பேணி எனை வளர்த்து
கற்றுணரக் கல்வி தந்து கனவுகளை சுமந்து வந்தாய் – நீ
வெற்றுடலம் ஆகும் வரை உன் விருப்பங்களை தவிர்த்து வந்தேன்
பற்றுடனே ஓர் துணையை பக்குவமாய் இணைத்து வைத்தாய்.

கந்தவேளின் சந்நிதியில் முருகவடிவேல் நாமம் வைத்தாய்
தந்தையை இழந்து நான் தனிமரமாய் நிற்கையிலே – எம்
சொந்தங்களை வரவழைத்து சொல்லிய பல கதைகள்
பந்த பாசம் அறிந்து கொண்டேன் பரிவுடன் பழகி வந்தேன்

தம்பி என்று அழைக்கும் போது தலை குனிந்து நின்றேன் அம்மா
வெம்பி நான் வேதனையில் அழும்போது கண்ணீரைத் துடைத்து நின்று
தும்பிக்கையான் துணை வருவான், துயரெல்லாம் துடைப்பான் என்று
நம்பிக்கை ஊட்டி என்னை நாளெல்லாம் பாதுகாத்தாய் – அம்மா

நோய் அறியேன், உடல் நொந்தறியேன் – வாழ்வில்
தாய் ஆன தெய்வத்தை பிரிந்து நான் வாழ்ந்தறியேன் – ஏக
சேய் நான் என்று என்னை செல்லமாய் வளர்த்ததனால்
தேய்ந்தது எம் செல்வமெல்லாம் திசைமாறிப் போனதே.

மன்னிக்கும் நீதிமன்றமாய் மனமொத்து வாழ்ந்தாய் அம்மா.
கண் இமைக்கும் பொழுதில் கண்மூடித் தூங்கினாயே.
பண் இசைத்து பாடிடுவாய் பல கதைகள் செப்பிடுவாய்
விண்ணோர்கள் அழைப்பை ஏற்றா வேறு உலகு சென்றாயே

நித்திரை வேளையிலும் நித்தம் நித்தம் தம்பி என்ற குரல்
முத்திரை பதித்து நிற்கும் முழு நாளும் அழைத்து நிற்பாய்
முத்தான சொத்துக்களை முழுவதுமாய் நான் இழந்தேன்
சத்துணவு தந்து சலிக்காமல் எனை வளர்த்தாய் – அம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெம்மாங்கு பாடி எனை தோள்மீது சுமந்தாயே
கும்மாளம் கொட்டி நான் குதித்து விளையாடும்போது
அம்மா நீ அருகிலிருந்து பார்த்து ஆனந்தம் அடைந்தாயே
அம்மா என்ற போதெல்லாம் தம்பி என்ற வார்த்தையை
இம்மா நிலத்தில் நான் எப்போது கேட்பேன் அம்மா

என் சேய்களை வாழ்த்தி நாளும் பூரித்து மகிழ்ந்தாயே
நோய் நொடியால் நீ நொந்து தவழ்ந்த போது – நான்
தாய் மடியாய் தாங்கி நின்று தக்கபணி செய்தேனே
வாய்விட்டு அலறுகிறேன் நீ வாழ்ந்த காலம் போதுமம்மா

முந்தை வினை பயனால் என் வாழ்வில் முழுமையாக
எந்தைக்கும் என் அன்னைக்கும் இறுதிக் கடமை செய்தேன்.
சிந்தை கலங்குகிறேன் சிதை மூட்டி வைத்தேனே – நம்
பந்தம் விலகியதால் பரிதவித்து வாழ்கிறேன் – அம்மா

பாலமுருகன் குடமுழுக்கு பார்த்த பின்பே செல்வேன் என்றாய்
காலனவன் கணித்தபடி அழைப்பை ஏற்று தனியாக
ஆலமுண்ட கண்டன் அடிதொழவா அங்கு சென்றாய்
சாலோகத்தில் அமர்ந்திருந்து எனை ஆசீர்வதிப்பாய் அம்மா

அன்பு மகன்
**திருமுருகவடிவேல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில்
## அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா மாமி

அரிது அரிது மானிடராக பிறத்தல் அரிது என்பது ஔவைப் பிராட்டியின் அருள் வாக்குகளில் ஒன்று. அவ்வாறு அரிய பிறவி வாய்க்கப் பெற்ற நாம் அல்லென கடிந்து நல்லென நாடி எல்லோரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என உறுதி கொண்டு செயல்பட்டு வாழலே நன்று. அவ்வகையில் வாழும் காலத்தை நல்லன பல புரிந்து "தற்காத்து தற்கொண்டான் பேணி" இவ்வுலகில் அகவை என்பத்தெட்டு வரை வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்த அன்பு மாமி சின்னப்பிள்ளை அவர்களும் ஒருவர்.

இவர் எந்தை கந்தப்பெருமாளின் இளைய சகோதரி, இவருக்கு சகோதரிகள் மூவர், சகோதரன்கள் மூவர், இவர் கண்ணாப்பணிக்கர் மகன் கந்தபருக்கும், கந்தப்பெருமாள் மகன் மாணிக்கப்பிள்ளைக்கும் நான்காவது பிள்ளையாக, 08.12.1935 கார்த்திகை திங்கள் 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 5.50 மணியளவில் கார்த்திகை மூன்றாம் காலில் பிறந்தவர். இவரது சந்திர இலக்கிணம் இடபம், உதய இலக்கினம் துலாம்.

இவரின் மூத்த சகோதரி கண்ணம்மை, கல்முனை மாமாங்கப் பிள்ளையார் ஆலய வீதியில் வசித்துவந்த வண்டிக்கார சின்னத்தம்பியரை மணம் முடித்து வாழ்ந்தவர். இறைப்பத்தி மிக்கவர். இல்லறக் கடமைகளை உரிய படி நிறைவேற்றியவர் இவரது பிள்ளைகள் சின்னவன், கிருஷ்ண பிள்ளை, சிவமணி, ஞானசௌந்தரி ஆகியோர். இவர் சகோதரி நல்லம்மாவின் இளைய மகன் சிவராசாவை இவரை வளர்த்து வந்தவர். முதல் இருவரும் மறைந்தாலும் பெண்கள் இருவரும் வாழச்சேனையில் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்தவர் எந்தை கந்தபெருமாள், (22.08.1925 - 12.07.1990) இவர் தெம்பர் மகன் கணபதிபிள்ளையின் மகன் வைரமுத்து வண்ணக்கரின் மகள் பிள்ளையம்மா பெத்தாங்குடி மரபைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து வாழ்ந்தவர். இவர் ஆரம்பத்தில் தந்தை கந்தப்பரோடு சேர்ந்து சிறந்த விவசாயியாக திகழ்ந்தவர். பின் தேற்றாத்தீவில் சில்லறை கடை வைத்திருந்தவர். பின்பு நோ.கூ.சங்க முகாமையாளராக கிராங்குளத்தில் பணி புரிந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஆசிரியர் நியமனம் பெற்று நல்லாசிரியராக திகழ்ந்து அகவை அறுபதில் ஓய்வு பெற்றவர். சிறந்த கவிஞராக, சோதிடராக, விஷ வைத்தியராக, ஆலய பரிபாலன சபை தலைவராக, (கட்டுப்பிள்ளையார் ஆலயம்), கிராமோதய சபைத் தலைவராக பல பணிகள் புரிந்தவர். நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து கலைஞர் இவரது பிள்ளைகள் சுந்தரலிங்கம் உதவி கல்வி பணிப்பாளர் (ஓய்வு), குணசேகரம் (உதவி கல்வி பணிப்பாளர் தமிழ்) மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராக பணி புரிந்தவர்), மகேந்திரன் பிரபலம் மிக்க ஆசிரியர் (பாடம் - கணிதம்) கலாவதி இந்திரலிங்கம், வேல்நாயகம் (சந்திரன்) விக்டோரியா ஸ்டுடியோ உரிமையாளர்), சோமாஸ் கந்தசாமி (பாடசாலை நூலக உதவியாளர்), இதயலெட்சுமி, நிமலதாசன் (மறைவு), இதயவேணி (ஆசிரியை) , தயாலெட்சுமி (முகாமைத்துவ உதவியாளர்), கோகுலராமன் (ஆலய குரு) இவர்கள் அனைவரும் தந்தையைப் போன்று சமய சமூக கல்விப் பணிகள் பல புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்தவர் பார்வதி பிள்ளை இவர் மாங்காட்டைச் சேர்ந்த தெம்பர் கணபதி பிள்ளையின் இரண்டாவது மகன் வேலுப்பிள்ளையின் மகன் நல்லதம்பியை திருமணம் செய்து வாழ்ந்தவர். இவர்களது மகள் தனலெட்சுமி நல்லதம்பியின் தாய் களுதாவளையைச் சேர்ந்தவர். சுரக்காமூர்த்தி குடும்பத்தவர் நல்லதம்பி வேளாண்மைச் செய்கையில் பெயர்பெற்று விளங்கியவர். முறிவு வைத்தியத்திலும் ஈடுபாடு காட்டியவர். மற்றவர் நல்லம்மா இவர் பழுகாமத்தைச் சேர்ந்த கணபதி பிள்ளையை திருமணம் செய்து வாழ்ந்தவர். அதன் பெயராக ஐந்து பிள்ளைகளை ஈன்றெடுத்தவர். பேரின்பராசா, தவராசா (அம்பிளாந்துறை கனிஷ்ட வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்). நடராசா, புனிதவதி (பல பாடசாலைகளில் நல்லாசிரியராக பணிபுரிந்தவர் பணியில் இருப்பவர்), சிவராசா. இவர்களில் பேரின்பராசா, நடராசா, சிவராசா மூவரும் நாட்டின் இஸ்திரமற்ற சூழ்நிலை காலத்தில் காணாமல் போயினர். ஏனைய இருவரும் சமய, சமூக, கல்வி நாட்டம் உடையவர்களாக சிறப்புற்று வாழ்கின்றனர்.

அடுத்தவர் சின்னத்தம்பி (கதிரேசன்) இளம் வயதில் ஆசிரியர் நியமனம் பெற்று, பின் அதிபராகப் பதவி வகித்தவர். என் கணிதம் கற்பிப்பதில் மிகவும் கெட்டிக்காரராகவும், சிறந்த பேச்சாளராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியவர். தேற்றாவளன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர். பன்குடாவெளியில் கற்பிக்கும் காலத்தில் அக்கிராமத்தில் பிரபல்யம்மிக்க குடும்பங்களின் ஒன்றான தோலிப்போடியார் குடும்பத்தில் தோலிப்போடியாரின் கடைசி மகள் பெத்தாங்குடி பரம்பரையான அரிநேசரானியை திருமணம் செய்து வாழ்ந்ததன் பேறாக நான்கு பிள்ளைகளுக்கு தந்தையானார். அதில் மூத்தவன் ஜெகதீசன் 1982ல் அகால மரணம் அடைந்தான். அடுத்தவர் மேகலா, அடுத்தவர் ஜெயகாந்தன் (ஆசிரியர்) மற்றவர் ஸ்ரீகாந்த் (ஆங்கில ஆசிரியர்). சின்னப்பிள்ளையின் இளைய சகோதரன் கணேசன் இவர் இளம் வயதிலேயே மரணத்தை தழுவிக் கொண்டவர்

அமரர் சின்னப்பிள்ளை அவர்கள் கருவிலே திருவுடையவராக பிறந்தவர். இவர் தந்தை மாத்திரமன்றி தாயும் இறைபக்தி மிக்கவர் இல்லற கடமைகளை சமய சமூக கடமைகளை உரியபடி உரிய காலத்தில் செய்வதில் பின்னிற்காதவர். கச்சலா குடியைச் சேர்ந்தவர் கச்சலா குடிமரபு முதலைக்குடாவில் இருந்து பின் பழுகாமத்தில் வாழ்ந்து அங்கிருந்து மிகப் பழங்காலத்திலேயே தேற்றாத்தீவில் குடியேறியதாக குறிப்பிடப்படுகின்றது. இவர் தந்தை கந்தப்பனின் தாய் பழுகாமத்தைச் சேர்ந்தவர் பெயர் வீராத்தை. காலிங்கா குடி மரபினர் என்பர்.

மாணிக்க பிள்ளையின் மூத்த சகோதரி செல்லம்மா, மற்றவர் அழகம்மா, அழகம்மா விரத அனுட்டானங்களில் அதிகம் ஈடுபட்டதோடு ஆலயங்களில் விரத காலங்களில் ஏடுபடிக்கும் பணியை மேற்கொண்டவர். இவர் தேற்றத்தீவு கிராமத்தின் முதலாவது தாதிய உத்தியோகத்தர் ருக்குமணி சிறந்த எழுது வினைஞராக பணிபுரிந்து, அதில் தேர்ச்சி பெற்று உயர் பதவி வகிக்கும் போது 1956-ல் கொழும்பில் பணிபுரியும் போது அகால மரணம் அடைந்த வேல்நாயகம் முதலியோரின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே ஒரு சகோதரன் வேலுப்பிள்ளை கவி புனையும் ஆற்றல் வாய்க்கப் பெற்றமையால் புலவர் என அழைக்கப்பட்டவர் சோதிடம், நாட்டு வைத்தியம், விஷ வைத்தியம் செய்வதில் வல்லவர் அண்ணா கவித்துவம் மிக்கவர். பனையோலையில் சாதகக் குறிப்பு எழுதியவர். கதிர்காம கந்தனுக்கு தங்கத்தால் வெற்றிலை செய்து கொண்டு கொடுத்தவர். மந்திரங்கள் படித்தவர் சட்டம்பி வேலைக்கு முயற்சித்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காமையினால் மனம் நொந்தவர். இசையோடு பஞ்சபுராணம் பாடுவதில் தேர்ச்சி பெற்ற இவர் ஏடு படிப்பதில் மிகவும் திறமை மிக்கவராக வாழ்ந்தவர்.

இவர்களது குடும்பத்தின் கல்விப் பணி போற்றத்தக்கது இதில் பாடசாலை கட்டவென வளவுகள் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது பாடசாலை கட்டவென வளவு கேட்டபோது கல்வி மீது உள்ள பற்றினால் நம்பிக்கை கொண்டு வளவு கொடுத்தவர் அழகம்மா மகன் கந்தையா என்பர் இதில் தற்போது கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. மாணிக்க பிள்ளை தேற்றாதீவு றோ.க.த.க.பாடசாலைக்கு 1968 களில் ஒரு வளவு எழுதிக் கொடுத்தவர். இது பாடசாலையின் வடகிழக்கு புறவளவோ அக்காலத்தில் இவ்வளவு வெற்றிலை தோட்டம், பெரிய பலாமரம் முதலியன காணப்பட்டமையை நான் அறிவேன். அமரர் செந்தில்நாயகம் அவர்கள் அதிபராக பணிபுரிந்த காலத்தில் மாமி சின்னப்பிள்ளையால் (மாரிமுத்து) றோ.க.த.க பாடசாலைக்கு ஒரு வளவு எழுதிக் கொடுக்கப்பட்டது இவ்வளவில் தான் தற்போது பட்டிருப்பு கல்வி வலயத்துக்கான கணனிவள நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 1968 களுக்கு முன்பும் ஒரு வளவு கொடுத்ததாக என் தந்தை கூறிய ஞாபகம் எனக்கு உண்டு.

சின்னப்பிள்ளை ஆசிரியை இளம் வயதிலேயே உரிய படி கல்வி கற்று ஆசிரியையானவர். பண்டிதர்.வீ.சி.கந்தையா மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர். அதிபர் வீ.சி.கந்தையா விரிவுரையாளர் திருமதி கங்கேஸ்வரி கந்தையா முதலியோருடன் நெருக்கமான உறவை பேணியவர். இவர்கள் தொடர்பு காரணமாகவே தன் வீட்டுக்கு "கூடல் இல்லம்" என பெயர் வைத்தவர் தேற்றத்தீவில் கண்ணிப்பிள்ளை ஆசிரியை இவரது மிக மிக நெருக்கமான நண்பியாக இருந்தவர். ஒன்றாக படித்தவர். பின் திருமதி அழகம்மா தம்பிப்பிள்ளை ஆசிரியையும் ஒன்றாகப் படித்தவர். மாங்காடு கிராமத்தின் முதலாவது ஆசிரியையும் இவருக்கு சகோதரி முறையினருமான திருமதி. பூரணம்மா தவராசா முதலியோருடன் இறுதி வரை நெருக்கமான உறவை பேணியவர்.

கல்விப் பணியோடு சமயப் பணியும் புரிந்து வாழ்ந்த இவர் இல்லறமாம் நல்லறத்தில் இணைய விரும்பி தன் சகோதரர்களினதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோரதும் ஆசீர்வாதத்தோடு இவரைப் போன்று இளமையில் சமயதீட்சை பெற்று ஆரிரியராக விளங்கியவரும் கொக்கட்டிச்சோலை கிராமத்தின் முதன்மை குடும்பங்களில் ஒன்றாக விளங்கிய, விளங்குகின்ற படையாண்டகுடி மரபினரான ஏ.தியாகராசா ஆசிரியர் அவர்களை சுற்றம்சூழ மணம் முடித்து நல்லறத்தின் பேறாக முருக வடிவேல் என்னும் மகனைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தவர். முருக வடிவேலும் பெயருக்கு ஏற்றாற்போல் பாலமுருகன் ஆலய பணிகளில் முன் நின்று செயற்பட்டு வருகின்றார். இவர் கச்சலா குடி மரபினர் அதிகம் வாழுகின்ற முதலைக் கூடாவைச் சேர்ந்த வடிவாம்பிகை என்பவரை திருமணம் செய்து அதன் பேறாக ஆண் சிங்கங்களை பெற்று நல்வாழ்வு வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அமரர் தியாகராசா நல்லாசிரியராக மட்டுமன்றி கொக்கட்டிச்சோலை இ.கி.மி., மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம் என்பவற்றிலும் கற்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சின்னப்பிள்ளை ஆசிரியை அவர்கள் ஆரம்பம் முதல் இறுதிவரை இறைபக்தியுடையவராக வாழ்ந்ததோடு ஏனையோரையும் அவ்வழிப்படுத்தியவர். ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகளை முன் நின்று நடத்தியவர். "நீறில்லா நெற்றி பாழ்" என்பதனை தலைமேற் கொண்டு சிறுவயதிலே சமய தீட்சை பெற்று சிவ சின்னங்களை தரித்து இறை நாமத்தை தவறாமல் உச்சரித்து புராண படணம் செய்து வாழ்ந்தவர்.

எண்பத்தெட்டு வயது வரை வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்த மாரிமுத்து மாமி அவர்கள் கடைப்பிடித்தொழுதிய நன்னெறிகளைப் பின்பற்றி நாமும் சமய சமூக நாட்டம் கொண்டவர் ஆக வாழ்வதோடு இவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

அன்பு மருமகன்.
**திரு.க.குணசேகரம்** M.A(T.EAD)
உதவிக்கல்வி பணிப்பாளர்,
மாங்காடு, செட்டிபாளையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சிறிய தாய் சின்னப்பிள்ளை
# குணமது கைவிடா குலமனையாட்டி

உலகில் தோன்றிய உயிர்கள் எல்லாம் இறுதியில் அழிவது உண்மை. நானும் தோன்றினேன். ஆதரவற்று, அல்லல்பட்டபோது கந்தப்பர் - மாணிக்கபிள்ளை அவர் மகள் சின்னப்பிள்ளை அவர்களுடன் நானும் ஒருவனாய் சேர்ந்து கொண்டேன். 1969இல் அவ்வகையில் அன்னமிட்டார், தூங்க இடம் கொடுத்தார், குடிக்க நீர் கொடுத்தார், படிக்க இடம் தந்தார் என் விதி அப்படி.

"அன்னமிட்ட கை என்னை ஆக்கிவிட்டதை மறக்கவில்லை" இரு தசாப்தம் உண்மையாய் அவர் இட்ட பணி சேவகனாய் அவர் பணிகள் செய்திடும் பொறுமையாளனாய், நான் வாழ சீறிச் சினந்து நல்வார்த்தை பேசி நலம் பல காட்டினாய், தடம் பல பதித்தார். சின்னம்மா சின்னப்பிள்ளை அவரது எண்ணத்தை மாற்றவோ தடுமாற்றவோ முடியாது. அவ்வாறான குணவாளி நீரம்மா. அதற்கு அவர் தேடிப் பயின்ற சமயபுராணத் தமிழ் பாட நூல்களே அதிலும் இறுதிவரை சொல்லி வந்த "சிவசிவா சிவனே" 89 வரை வாழ்ந்து இருக்க செய்தது. மூன்று தசாப்தங்கள் அவர் தொடர்பை விட்டு இருந்தேன். இறுதியில் 80 வந்து இருக்காது காட்டினார். அணைத்தேன், ஆதரித்தேன். அப்போதும் குணமது கைவிடா குலமனை யாட்டி தான் அதற்காக அவர் பாடும் பாடல் ஒன்று

ஆபத்திற்கு உதவாப் பிள்ளை
அரும்ப பசிக் உதவா அன்னம்
தாகத்தை தீரா தண்ணீர்
சரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன்
திருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தை தீரா தீர்த்தம்

(பயனில்லை ஏழும் தானே - ஆதலால் இவர் ஆத்மா மீண்டும் ஒரு பிறப்பெடுக்காமல் இருக்க என் பிரார்த்தனைகள்)

அன்பே சிவம்

அவரால் உருவப்பெற்ற
**க.தவராசா**


noolaham.org | aavanaham.org

# அம்மா....!



அப்பம்மா
அம்பி வந்திருக்கின்றேன்
திருநீறு போடுங்க

நான்!
உங்களுக்கு
திருநீறு போடுகின்றேன்
நெற்றியை காட்டுங்க
அப்பம்மா

பிக்கா (பிஸ்கற்) எங்க
அப்பம்மா
தேடித் தேடி வந்து
எனக்கு பிஸ்கற் தந்து விட்டு
சென்ற நாட்களை
நான் வளர்ந்து
உணர்வேன்
அப்பம்மா
இப்போ எனக்கு
பிஸ்கற் தாங்க
அப்பம்மா
இப்போ என்ர அப்பம்மா
சாமிற்றப் போயிற்றா.....

**அப்பம்மாவை தேடும்**
**பேரன் பிரதீந்தன் முருகவடிவேல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரிமுத்து என்னும்
# மங்காத பேரொளி

வங்கக்கடல் அலைமோதும் செங்கதிரோன் ஒளிபாயும்
செந்நெல் தலை சாய்க்கும் செந்தாமரை மலர் விரியும்
குயிலினம் இசை பாடும், குரங்குகள் தாவியோடும்,
வெற்றிலை, மா, பலா வாழை குலை தள்ளும்,
கொம்புச்சந்தியான் பாலமுருகன் அருளோங்கும்
பண்ணோடு பலகலை சேர்ந்து வளரும், தேனூர் பதியில்
கந்தப்பன் – மாணிக்கப்பிள்ளைக்கு மகளாய் வந்துதித்த
மாரிமுத்து அக்காவின் மறைவையொட்டி மலரும் நினைவலைகள்

தெய்வத் திருமகன் தியாகராஜாவின் மனம் கவர்ந்தவர்
திருமணம் புரிந்து இருமனம் கலந்தார்
முருக வடிவேலனை உலகிற்கு ஈந்தவர்
முழுமூச்சாய் என்றும் ஆலய தரிசனம் செய்தவர்

தேனூர் மகாவித்தியாலயத்தின் இடப்பற்றாக்குறை போக்கினீர்கள்
தியாக செம்மலாய் காணியை நன்கொடையாய் ஈந்தீர்கள்
ஆரம்பக் கல்வி ஆசிரியராக அரும்பணி புரிந்தே – நாளும்
அறநெறி கல்வியை ஆவலுடன் அழகாய் ஊட்டினீர்கள்

கணீர் என்ற கம்பீர குரலுக்கு உரிமையானவர்
கந்தபுராண படலம் கதை விளம்பும் காரிகையானவர்
சைவ சித்தாந்த சிந்தனையை சிறப்பாக சித்தரிப்பீர்
திருமுறைப் பாடல்களை தினமும் ஓயாமல் ஓதி நின்றீர்கள்

சானித்தியம் பெற ரமண மகரிஷியின் சிந்தையை சிரமேற் கொண்டே
ஆறாத துயரிலும் அசையாது ஆலயப் பணி ஆற்றினீர்கள்
ஞானமும் கல்வியும் நயம்பட நவின்ற நாவினள்
ஊன் உடல் களைந்து உள் ஒளியில் கலந்திட்ட உத்தமியானாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிற ஆடையில் நித்தமும் கண்டேன்
வெண்ணீறு பூசிய நெற்றியும் கண்டேன்
வருடம் தோறும் விரதம் நோக்க கண்டேன்
விநாயகர் சஷ்டியில் பிள்ளையார் கதை படிக்க கண்டேன்

அகிலத்தின் ஒளியான அண்ணாமலையானின்
அருட்கடாட்சம் அடைய வேண்டி - வாழ்வின்
பேரிடர்கள் பலதும் தாண்டி இறையுடன் கலந்த
மாரிமுத்து என்னும் மங்காத பேரொளி மறைந்ததே

திருமதி. வாசுகி துரையப்பா
(ஓய்வுபெற்ற ஆசிரியை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் "

மட்டக்களப்பு தேனூர்ப் பதியில் விரல்விட்டு எண்ணத் தக்களவிலேயே அரச சேவையாளர்கள். இங்கு மட்டுமல்ல ஏனைய கிராமங்களிலும் அவ்வாறே. பசுபதி அக்கா, மாரிமுத்தக்கா, மணி அக்கா, இராசம்மாக்கா, இரத்தினம்மாக்கா, கன்னிப் பிள்ளக்கா, அருளம்மாக்கா என பெண் ஆசான்கள். இவர்களுள் மாரிமுத்தக்கா, பசுபதி அக்கா, இரத்தினம்மாக்கா இவர்களிடம் ஆரம்பக் கல்வி பெறும் பாக்கியம் எனக்கு கிட்டியது. மட்/பட்/தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விக்கென அடியெடுத்து வைத்த போது மாரிமுத்தக்காதான் என்னை இன் முகத்தோடு வரவழைத்து வகுப்பறையினை காட்டி அமரச் செய்து அரிச்சுவடி தந்து அறிவுக் கண்ணை திறப்பதற்கு ஆரம்ப கர்த்தாவானார். அன்றிலிருந்து அக்கா இறையடி சேரும் வரை அவரை நினைக்காத நாளில்லை. அவர் ஆத்மா பிரிவதற்கு முதல் நாள் ஏதோ அலுமாரியில் தேடும்போது அக்கா எனது மகளுக்கு எழுதி அன்பளித்த திருமண வாழ்த்து எனது கண்ணில் பட்டு வாசித்து கண்கலங்கி விட்டேன். அடுத்த நாள் அவரது மரணச் செய்தி கிட்டியதும் தாங்கொணா துயரடைந்தேன். இன்றைய மட்/பட்/தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம் அன்று மட்/தேற்றாத்தீவு அ.த.க பாடசாலை என பெயரிடப்பட்டிருந்தது. பெயர் மாற்றம் செய்யப்பட்டதும் மாரிமுத்து அக்காவின் சேவைக் காலத்திலேயே தான் அதற்கு முன்னின்று உழைத்தவர் காலஞ்சென்ற கதிரேசன் ஐயா அவர்களே

ஓர் நாள் நாங்கள் வகுப்பறையில் இருக்கும்போது மட்டக்களப்பு கல்விப் பணிமனையிலிருந்து கல்வி அதிகாரி ஒருவர் எங்கள் வகுப்பறைக்குள் புகுந்தார். கம்பீரமான தோற்றம், கழுத்துப் பட்டி, முழு நீளக்கையுள்ள சேட், ரவுசர் நாம் எல்லோரும் எழுந்து நின்று "வணக்கம்" சொல்லி அமர்ந்து கொண்டோம். அன்று வெள்ளிக்கிழமை "உங்கள் ஆசிரியர் எங்கே? " என அவர்கள் எங்களை வினவ நாங்கள் எல்லோரும் "அவர் பெரிய வகுப்பு மாணவர்களை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று விட்டார் நாங்கள் கீழ் வகுப்பு என்பதால் எங்களை அழைத்துச் செல்லவில்லை" என்றோம்."உங்கள் ஆசிரியர் பெயர் என்ன?" என்றார் அந்த உயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி. நாங்கள் எல்லோரும் "மாரிமுத்து" என்றோம். அது அவருடைய பெயர்கிடையாது. "சின்னப்பிள்ளை" என கரும்பலகையில் எழுதிவிட்டார். அன்றுதான் அக்காவின் பெயர் சின்னப்பிள்ளை என தெரிய வந்தது. இருந்தும் நாம் அப்பெயரை உச்சரிப்பது கிடையாது. மாரிமுத்து அக்கா என்றே குரு பக்தியோடு அழைப்போம்.

அக்கா அப்போது இளம் வயது திருமணம் செய்யவில்லை. இருந்தும் அலங்காரமாக உடை அணியமாட்டார். எளிமையாக இருப்பார். திருநீற்றுப்பூச்சு நெற்றியிலிருந்து மாறாது "நீறில்லா நெற்றி பாழ்" என்று ஔவையின் நல்வழி கூறும் கருத்தினை தலைமேல் கொண்டவர்.

நாங்கள் இரண்டு, மூன்று பேர் சேர்ந்து அக்காவின் வீட்டிற்கு லீவு நாட்களிலும் பாடசாலை விட்டபின் பின்னேரங்களிலும் செல்வோம். அப்போது ஓடி, பாடி விளையாடுவோம். எங்களை அழைத்து கை கழுவவைத்து சிற்றுண்டிகளும் தேநீரும் தருவார். எங்களுக்கு தேவாமிர்தம் போல் இருக்கும். உச்சரிப்பு என்பது அக்காவுக்கு உடன் பிறந்த பண்பு.

நான் உயர்கல்வி கற்று ஆசிரியர் தொழில் கிடைத்தபோது அவரிடம் ஆசிர்வாதம் பெற சென்றபோது என்னை வாழ்த்தி ஆசீர்வதித்தமை இன்றும் என் மனதில் நீங்கா நினைவாக உள்ளது. நான் திருமணமாகி தனியாக இருக்கும் காலத்தில் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவார். நாங்களும் சென்று வருவோம். தங்கள் வீட்டில் கிடைக்கும் பழங்கள், காய்கறிகள் என்பவற்றை அன்பாக அனுப்பி வைப்பார். அதுபோலவே நாங்களும் அனுப்பி வைப்பது வழக்கம்.

அக்கா கரம்பிடித்த தியாகராசா ஐயா அவர்கள் ஓர் பண்பாளர், அறிவாளர், அமைதியான தோற்றம் துவிச்சக்கர வண்டியில் வந்து கேற்றில் மணி ஒலிப்பார். "வாங்கோ ஐயா" என்றதும் இன்முகத்தோடு உள்ளே வந்து அமர்வார். இவை யாவும் இன்றும் சற்று முன் வந்து போகிறது. அவர் நோயுற்றிருந்த போது நான் ஆசிரியர் பயிற்சி கலாசாலை லீவில் வந்துநின்றவேளை என்னை அழைத்து "வினோதா பிள்ள இவருக்கு ஏதாவது ருசியாக செய்து கொடு" என்று எல்லாப்


noolaham.org | aavanaham.org

பொருட்களும் வாங்கித் தந்து உப்புமா செய்துகொடு என்றார். நானும் மிகவும் மகிழ்ச்சியோடு வீடு சென்று அவர் சொன்னபடி செய்து ஐயா உண்பதற்காக கொடுத்தேன் அவரும் சிறிதளவு உண்டு மகிழ்ச்சி அடைந்தார். இவ்வாறு உறவு நிலைத்தது.

எனது கணவர் பிள்ளைகளிடமும் அன்பு காட்டுவார். எனது கணவர் மட்/பட்/தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயத்தில் ஆசிரியராக கற்பித்தவேளை அக்காவும் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஓர் வழிகாட்டியாக இருந்ததாக அடிக்கடி என்னிடம் கூறுவார். இவ்வாறு எங்களது வாழ்வில் ஆசானாக, அறிவுரை கூறுபவராக, வழிகாட்டியாக இருந்தார்கள் என்பதனை ஒருபோதும் மறந்து விடவோ, மறுக்கவோ முடியாது.

நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் தன்னை வளர்த்து விட்ட குருவை நினைவு கூற மறக்க மாட்டார். "கங்கேஸ்வரி அம்மா எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் என்பார். அவரது படம் கூட தனது வீட்டில் மாட்டப்பட்டிருந்தமையினைக் கண்ணுற்றுள்ளேன். கடவுள் பக்தியோடு குரு பக்தியும் அவரிடம் சிறப்பாக தென்பட்டது. எனது குருவின் விருப்பிற்குரிய குருவின் வரலாறு பற்றி அறிய வேண்டும் என அவாவுற்றிருந்தவேளை பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் கடமையாற்றிய முன்னாள் பிரதிக் கல்வி பணிப்பாளர் மண்டூரைச் சேர்ந்த விமலநாதன் சேர் அவர்களது குறிப்பு ஒன்றிலேயே இணையதளத்திலிருந்து வாசிக்க கிடைத்தது. அவர் ஒரு முன்மாதிரியாளர் என்பது தெட்டத் தெளிவாக இருந்தது. அதுதான் அக்காவினை ஈர்த்துள்ளது என்பது எனக்குப் புரிந்தது.

ஆன்மீகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். கடவுள் பக்தி அவரது முதல் குணாதிசயம் என்றே கூற வேண்டும். கடவுள் மீது பித்துப்பிடித்தவர்போல் காணப்படுவார். தேவார பாராயணம் மட்டுமல்ல ஏனைய கந்தபுராணம் படித்தல், விநாயகர் கதை படித்தல் என்பன விரத காலத்தில் அக்கா இல்லாமல் ஒருபோதும் இடம்பெறாது. சைவநற் சிந்தனைகள், பிரசங்கம் என்பனவும் அவரது காலத்தில் ஆலயங்களில் கூடுதலாக இடம் பெறும். அது மட்டுமல்லாமல் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவது என்பது அவருக்கு உரித்தானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத காலத்தில் கூட அவரது வீட்டிலிருந்த மரம், செடிகள் நீரின்றி வாடிக்கிடக்க ஒருபோதும் விடமாட்டார். நீர் இறைப்பதைப் பார்த்து அதிசயித்து உள்ளேன்.

"புண்ணியம் ஆம் பாவம் போம் போன
நாள் செய்த அவை மண்ணில் பிறந்தார்க்கு
வைத்த பொருள் எண்ணுங்கால் ஈது ஒழிய வேறில்லை எச்
சமயத்தோர் சொல்லும் தீது ஒழிய நன்மை செயல்'

என்கிறது நல்வழி. மண்ணில் பிறந்த வினை தீர்த்து பூதவுடல் அக்கினியில் சேர வேண்டும் என்ற எண்ணமும் நிறைவு பெற்று அவரது ஆத்மா அறவாநீ ஆடும் போது உன் அடியில் கீழ் இருக்க வேண்டும் என்று காரைக்கால் அம்மையார் வேண்டியது போல இறையின் பாதம் சேர வேண்டும் என வேண்டி அவரது பெற்ற மகன், பெறா மக்களும், பேரப்பிள்ளை ஏனைய உற்றார் உறவினரும் மன ஆறுதல் பெற வேண்டும் எனவும் இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி.. சாந்தி ...சாந்தி ....

**திருமதி. வி. செல்வராசா**
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்,
பட்டிருப்பு கல்வி வலயம்.


noolaham.org | aavanaham.org

# மாரிமுத்தக்காவே....!

தவமெது செய்தாள் நின்தாய் நினை மகளாய்ப் பெறவே
புவிபுகழ் மேன்மைக் குரியளாய் பெற்றாள் பெருமையுற்றாள்
கவலழிந் தாள்தனைக் காக்கப் பிறந்தாள் குழந்தையென்றே
சிவமுதல் தியாகராசா சின்னப்பிள்ளை மாரிமுத்தக்காவே...!

அவைமுதற் கோன்மை அனைவரும் ஏற்றல் அரிதெதிலும்
அவைமுதல் ஆசனம் அம்மையே நீ பெறும் ஆற்றலுற்றாய்
புவிதனில் உன்புகழ் பேசிடக் கூடுமோ போனதெங் கே
சிவமுதல் தியாகராசா சின்னப்பிள்ளை மாரிமுத்தக்காவே...!

எவர்க்கும் இனியாள் இளகிய நெஞ்சுடை ஏந்தலராக
உவப்பவரே யாரெவ ராயினும் உள்மன ஒப்புதலாள்
தவப்பணி சேவைச் செயலென எண்ணிச் செயல்புரிந்த
சிவமுதல் தியாகராசா சின்னப்பிள்ளை மாரிமுத்தக்காவே...!

கவல் மிகக் கொண்டனர் கைகடந் தேகினை காரணத்தால்
இவன்பதி வாழ் உன்குலத்தார் தாமும் இப்புவியில்
எவன் ஒருபேருன் இடைவெளி தீர்ப்பார் எனநினைந்தே
சிவமுதல் தியாகராசா சின்னப்பிள்ளை மாரிமுத்தக்காவே...!

புவிவிடுத் தேகிய போழ்திலும் உள்ளம் புகுந்தவள் நீ
கவின்றிடில் நின்பிரி வாலெம் நிலையுமே நிரக்கதியாம்
கவிந்ததோ கார்முகில் உற்றவர் நெஞ்சுள் கதியிதுவோ
சிவமுதல் தியாகராசா சின்னப்பிள்ளை மாரிமுத்தக்காவே...!

**கலாபூஷணம் தேனூரான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் சின்னம்மா....

இயற்கை அழகும் விளைவு நிலமும் கொண்ட கிராமம் தான் தேற்றாத்தீவு கிராமம் இக்கிராமத்தில் சிறந்து வளர்ந்த இறை பக்தியின் சிகரம் அமரர் தியாகராசா சின்னப்பிள்ளை அவர்களின் பிரிவினை கேட்டதும் கலங்கியுள்ளேன்.

என் சிறுபராயம் முதல் இன்று வரை அவருடன் பழகிய நினைவுகள் என்றும் மறக்க முடியாதவை. எனது ஒன்றை விட்டு சிறிய தாய். எல்லோருடனும் பாசமானவர். அவரின் கனிவான பேச்சும் அன்பான வார்த்தையும் என் மனதில் இன்னமும் நிலைத்துள்ளது.

தோன்றில் புகழோடு தோன்றுக அ∴திலார் தோன்றலில் தோன்றாமை நன்று எனும் திருவள்ளுவரின் வாக்கிற்க் கேற்ப எங்கு சென்றாலும் மங்காப்புகழுடன் வாழ்ந்து எல்லோரது இதயங்களிலும் நல்லதோர் இடம் பிடித்து விட்ட எனது சின்னம்மா. இவர் எங்களது குடும்பத்தில் இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் முன்நின்று செயற்பட்டு வரும் மூத்ததாய். என்று சொல்லும் அளவிற்கு நெருங்கி செயற்பட்டவர். உறவுகளை மட்டுமல்ல மனிதர்களை என்றுமே தரம் பிரித்துப் பார்க்காத தலைவியாக நான் பார்க்கின்றேன்.

உங்களது ஆழமான இறைபக்தியும் இறையன்பும் எப்படி நாங்கள் இப்பூமியில் காண்பது? உறவுகளுடன் பிரியமுடன் வாழ்ந்த நீங்கள் உறவுகளை விட்டு தூரத்தே சென்று விட்டீர்கள் வயது முதிர்ந்த நிலையிலும் நீங்கள் தளராத இறைபணியினை நாவினால் பாடி செய்துள்ளமை. எங்களை இன்னும் மெய்சிலிர்க்க வைக்கின்றார். கடைசிவரையும் உங்களின் மூச்சு இறைவனையே நினைத்து அவனடி சேர்ந்துள்ளது. தங்களின் ஆத்மா சாந்தி பெற சித்தி விநாயகப் பெருமானின் அருள்பாலிக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

பெறாமகன்

**து. கிருஷ்ணபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மகளின் புலம்பல்

என் சிறிய தாயாரே
தீர்மானிக்க முடியாத என் பிறப்புக்கள்
சேர (ர்க்க) முடியாத என் உறவுகள்
ஈடு செய்ய முடியாத என் இழப்புக்கள்
ஏற்க முடியாத பல துன்பங்கள்
வெளிப்படுத்த முடியாத உண்மைகள்
அனுபவிக்க முடியாத சில சந்தோசங்கள்
உணர்த்த முடியாத பல உணர்வுகள்
மறைக்க முடியாத பல துயரங்கள்
மறக்க முடியாத உன் பல நினைவுகளுடன்

இவள் **புனிதம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாரிமுத்தக்கா

"ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டாம்
நமக்கும் அதுவழியே நாம் போமளவும்
எமக்கென் என்றிட்டுண்டிரும் " - வாக்குண்டாம் -

நல்வினைப் பயனாக அரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் செயற்கரிய செயல்களாகிய தானமும் தவமும் செய்யும் போது வானவர் நாடு வழிதிறந்து அழைக்கும் என்ற ஔவையின் வாக்கிற்கிணங்க மகத்தான செயல்களைப் புரிந்து பிறவா நிலையை அடைவதே ஆன்மாக்களது இறுதி இலட்சியமாகும்.

அந்தவகையில் தேற்றாத்தீவு கிராமத்தில் 1935ம் ஆண்டு பிறப்பெடுத்த மாரிமுத்தக்கா என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அமரர் சின்னப்பிள்ளை தியாகராசா அவர்கள் தனது மகத்தான செயல்களூடாக அனைவரது மனங்களிலும் என்றும் நீங்கா இடத்தைப் பெற்றவராவார்.

"தவமும் தவமுடையாருக்கே " என்று அடிக்கடி அக்கா அவர்கள் கூறுவது போல் தானும் காரைக்கால் அம்மை குழந்தைப்பராயம் முதலே சிவபக்தியில் ஈடுபாடு கொண்டவர் என்பதை அறிய முடிகின்றது. விபூதி, உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்களைத் தரித்தல், சைவ உணவுண்டு சைவ ஆசாரத்தைக் கடைப்பிடித்தல், சந்தியாவந்தனம் செய்தல், விரதங்களை நோற்றல், ஆலய தரிசனம் செய்தல் போன்ற சிவபக்தியில் திளைத்தவர். தான் ஆசிரியர் பணி புரிந்ததினால் கல்வியோடு சைவத்தினையும் மாணவர்களுக்கு ஊட்டி வளர்த்த பெருமைக்குரியவர். பல நூல்களையும் கற்றறிந்து தன்னை ஒரு சமயப் பிரசங்கியாக வளர்த்துக் கொண்ட இவர் நீண்டகாலமாக ஆலயங்களில் சமயப் பிரசங்கம் செய்து வந்ததோடு திருமுறைகள் ஓதும் பணியையும் தனது இளமைக்காலம் முதல் இறுதிக்காலம் வரை மேற்கொண்டு வந்த சிறந்த ஓதுவாருமாவார். குறிப்பாக எமது தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் பன்னெடுகாலமாக வைகுண்ட ஏகாதசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம், பீம ஏகாதசி விரதம், சிவராத்திரி விரதம், பிள்ளையார் காப்பு விரதம், கேதாரகௌரி விரதம் போன்றவற்றை தான் தொடர்ந்து நோற்றதோடு ஏனையவர்களையும் விரதமிருக்க வழிப்படுத்தி கிராம மக்களிடம் பக்தியையும், ஒழுக்கத்தையும், இந்து தர்மத்தையும் வளர்த்த பெருந்தகை இவர். ஆலயங்களிலே சிவராத்திரி புராணம் படித்தல், பிள்ளையார் பெருங்கதை படித்தல், சித்திரபுத்தனார் கதை படித்தல், கந்தபுராணபடன பாராயணம் செய்தல், ஏகாதசி புராணம் படித்தல் போன்ற பணியினைத் தொடர்ந்து செய்துவந்த பெருமைக்குரியவர்.

குறிப்பாக ஏகாதசி புராணம் படிப்பதில் இவருக்கு நிகர் இவரே ஆகும். மக்களை சைவத்தின்பால் வழிப்படுத்துவதற்காக புராணக் கதைகள் பலவற்றை உட்புகுத்திப் பிரசங்கம் செய்வதில் கைதேர்ந்தவர். ஆலயங்களில் சமயகுரவர் குருபூசை, கந்தசஷ்டி, நவராத்திரி போன்ற விரத காலங்களிலும், விழாக் காலங்களிலும் இவருடைய பிரசங்கங்கள் தவறாது ஒலிக்கும்.

இவற்றைவிட ஒரு சைவசமயி கடைப்பிடிக்க வேண்டிய பொதுப்பண்புகளான அன்புடைமை, இனியவைகூறல், ஒழுக்கமுடமை போன்றவற்றைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்த அமரர் சின்னப்பிள்ளை தியாகராசா (மாரிமுத்தக்கா ) அவர்களுடைய ஊனுடம்பு அழிந்தாலும் புகழுடம்பினூடாக என்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பார். அன்னாரது ஆத்மா மீண்டும் பிறவாதிருக்கும்படி கொம்புச்சந்தி பிள்ளையாரின் திருவடி நிழலில் நிலைத்திருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**த.விமலானந்தராசா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமி ஓர் தெய்வப் பிறவி

## அமரர் சின்னப்பிள்ளை தியாகராசா (மாரிமுத்து மாமமி) அவர்களைப் பற்றிய நினைவலைகள்

எங்கள் மாரிமுத்து மாமியுடன் எனக்கு 28 வருடங்கள் பரிட்சயம் உள்ள போதிலும் கடந்த ஆறு வருட காலமாக அவருடன் அதிகம் பழகக் கூடிய வாய்ப்பு எனக்கு கிட்டியது. ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் அவர்களின் வீடு செல்வேன். எனக்கு பிஸ்கட், சீனிக்கதலி வாழைப்பழம், பால் தேனீர் தருவார். பாலமுருகன் ஆலய கட்டுமானம் தொடர்பில் முருகன் அத்தானை சந்திக்கச் செல்லும் போது ஆலய கட்டிட வேலைகள் பற்றி ஆர்வமாக விசாரிப்பார். தான் மரணமடைந்து போனாலும் மகன் முருகனை நன்கு கவனித்துக் கொள்ளும்படி கூறுவார். தான் இறந்தால் தன்னை எரிக்க வேண்டும் என்றும் கூறுவார்.

ஆலயத்தில் நற்சிந்தனை சொல்வதில் வல்லவர். ஒருமுறை நற்சிந்தனை சொல்லும் போது கூறினார் "அதிகாலையில் நாம் நித்திரை விட்டு எழவேண்டும் " என்று ஏனெனில் மருத்துவத் தேவர் அதிகாலை 4.00 மணி முதல் 5.00 வரை உலவுவதாகவும் அவ்வேளையில் நாம் எழுந்து காலைக் கடன்களை நிறைவு செய்யும் போது மருத்துவத் தேவர்களின் அருளைப் பெற்று நாம் நோய் நொடிகள் இன்றி வாழலாம் என்றார்.

அத்துடன் மாமி மரணமான அன்று பிற்பகல் 1.30 மணியளவில் அவர்கள் வீடு சென்றேன். மாமி படுக்கையில் படுத்திருந்தார். அவரது வயிறு மாத்திரம் இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவரது காதில் துதிப்போர்க்கு வல்வினையோம் துன்பம்போம் எனத் தொடங்கும் கந்தசஷ்டி கவசத்தினை பாடினேன். அப்போது அருகில் முருகன் அத்தானும் இருந்தார். சிறிது நேரம் அதனைப் பாடிவிட்டு நான் வீடு சென்றுவிட்டேன். வீடு சென்று சில நிமிடங்களில் முருகன் தொலைபேசியில் அழைத்து மாமி காலமாகி விட்டதாக கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மாமி ஓர் தெய்வப்பிறவி. அவர் ஸ்ரீ பாலமுருகன் பாத கமலத்தில் சாந்தி பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

தேனூரின் முத்தான சேவகி
பாலமுருகனின் பண்பான பாடகி
வயது எண்பத்தெட்டு கண்ட வித்தகி
எங்கள் மாமி ஓர் தெய்வப் பிறவி

**கணபதிப்பிள்ளை கிருபைராஜா**

பாலமுருகன் ஆலய படையாட்சிகுடி
வண்ணக்கர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசான்

எனக்குப் பிடித்த ஆசிரியர்களுள் மாரிமுத்து அக்கா என செல்லமாக அழைக்கும் திருமதி சின்னப்பிள்ளை தியாகராஜா மறக்க முடியாத ஒருவர். நான் சிவகலை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொழுது மாரிமுத்து அக்காவிடம் கல்வி பயின்றேன். அவர் நெற்றியில் அழகாக திருநீறு அணிந்திருப்பார். இனிமையான குரல். தேவாரங்களை பாடும்போது ஆனந்த கண்ணீர் வரும் எங்களுக்கு. பக்தி கதைகளைச் சொல்லித் தருவார். ஒரு மாலையும் சிறிய நெளிவுகளைக் கொண்ட ஒரு சோடிக் காப்பும் அணிந்திருப்பார். என்னுடன் மட்டுமல்ல எனது அம்மா அப்பாவிடமும் அவர் அன்பாக பழகினார். ஒருமுறை அதாவது தரம் ஒன்றில் கல்வி கற்கும் பொழுது நாங்கள் ''சின்ன சின்னப் பூனை...." என்ற பாடலுக்கு நடனம் ஆடினோம். என்னுடன் வாசுகி ஆசிரியை (வாசுகி துரையப்பா) அவர்களும் நடனம் ஆடினார். அது இரவு நேரத்தில் பாடசாலையில் நடந்த ஒரு கலை விழாவாகும். நாங்கள் இப்பவும் அதனை பகிர்ந்து கொள்வோம்.

நாங்கள் இடைவேளை நேரத்தில் வீட்டுக்குச் சென்றால் அம்மா தேநீர் தயாராக வைத்திருப்பார் அதனை அக்காவிடம் கொடுத்ததும் அவர் எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுத்து குடிப்பார். பாடசாலை விட்டதன் பின்னர் எங்கள் வீட்டுக்கு அக்காவுடன் பசுபதி அக்கா, கதிரன் அக்கா, வள்ளியம்மை அக்கா வந்து செல்வார்கள் காரணம் எங்கள் தோட்டத்து மரக்கறிகளை பெற்றுச் செல்வதற் காகவும், இளைப்பாறிச் செல்வதற்காகவும்.

மாரிமுத்து அக்காவிற்கு மாப்பிள்ளை தேடும் பணி இடம்பெற்றும் கந்தப்பெருமாள் ஐயா அதாவது அவருடைய சகோதரர் அவர்களினால் கைவிடப்பட்டது. காரணம் மரக்கறி உணவு உட்கொள்ளும் மாப்பிள்ளை தேடியதால் அது கஸ்டமாக இருந்தது. இந்நிலையில்தான் அம்மாவும் அப்பாவும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வருவார்கள். அவர்கள் சிவனை தந்தையாக நினைத்து வழிபடுவார்கள். நானும் அவர்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே செல்வேன். அப்பொழுது ஒரு வீட்டுக்குச் சென்றுதான் வருவார்கள். அந்த வீட்டில் பெரிய ஒரு தளப்பத்து மரமும் இருந்தது. அந்த வீடுதான் தியாகராஜா ஐயாவின் வீடு என்பது பின்னர் தான் தெரிந்தது. அவருக்கு ஒரு அண்ணனும் இருந்தார். அவர் ஒரு போஸ் மாஸ்டர். அவரிடம் பேச்சுவார்த்தை நடந்து திருமணமும் முடிந்தது.

அக்காவைப் பார்த்து நானும் பக்தி செய்ய வேண்டும் என நினைத்தேன். நானும் எனது சுவாமி அறையை கோயில் போல் புனிதமாக வைத்திருந்தேன். நான் சுவாமி அறையில் பிரார்த்தனையில் ஈடுபட்டதை அக்கா ஒரு நாள் ஒழிந்து இருந்து பார்த்திருந்தார். அதை அம்மாவிடம் கூறி பூரிப்படைந்தார். அதன்பின் தியாகராஜா ஐயாவும் எங்களிடம் நெருங்கிப் பழகினார். அவருடைய புன்னகை பூத்த முகம் இப்பவும் மனக்கண் முன் தோன்றுகிறது. அவர் அதிகம் பேசமாட்டார். அக்காவும் அவருடைய ஆன்மீக முயற்சிகளை அதிகரித்துக் கொண்டார். எந்த ஒரு ஆலய நிகழ்வுகளிலும் அக்காவின் குரல் ஒலிக்காமல் விடாது. முடியாத நிலையிலும் கூட அவர் விநாயகர் கதை படிப்பார். அதை நான் வீட்டில் இருந்து கொண்டே கேட்பேன். காரணம் சரியை, கிரியை இல் இருந்து இராஜயோக கல்வியை கற்றுக்கொண்டு இருப்பதனால் அங்கு செல்வது குறைவு.

நான் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு தெரிவானபோது மிகவும் சந்தோஷப்பட்டார். அவரிடம் ஆசிர்வாதம் பெறச் சென்ற போது கட்டியணைத்து முத்தமிட்டு பரிசுப்பொருளும் தந்தார். அதனை என்னால் மறக்கவே முடியாது. எனது வாழ்விலும் பல சம்பவங்கள் இடம்பெற்றன. அக்காவும் ஓய்வு பெற்றபின் அடிக்கடி தொடர்புகள் இல்லாவிட்டாலும் அவர் வீட்டில் பழுக்கும் பழங்கள், காய்கறிகள் எதுவானாலும் யாரிடமாவது கொடுத்து அனுப்புவார். என்மீது அவ்வளவு அன்பானவர். அவருடைய குடும்ப பிரச்சினைகளை என்னிடம் கூறுவார். தனது மகன் மேல் மிகவும் அன்பாக இருந்தார். முருகன்.... முருகன்..... என்றே எந்த நேரமும் கதைப்பார். முருகன் மீதே அவருடைய உயிர் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நேரத்தில் அவரைச் சந்திக்கவில்லை. காரணம் நானும் எனது நண்பியும் ஒன்றாக சென்று பார்ப்போம் என்றிருந்தோம். அது நடக்கவில்லை அதற்கு முன்னர் நானும் எனது பிள்ளைகளும் அவரிடம் சென்றோம். அவருக்கு மிகவும் சந்தோஷம். நீண்ட நேரம் அவருடன் இருந்து விட்டே வந்தோம்.

சிவ சிவ என்னச் சிவகதி தானே என்பதற்கமைய அவருடைய ஆன்மாவானது சிவபதம் அடைந்தது. முத்தியை அருள்பவர் சிவனேதான். ஆன்மாவானது மீண்டும் பிறக்கும் போது கன்ம வினைகளுக்கு ஏற்பவே பிறவி எடுக்கும். "பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும் துறந்தோர் துறப்போர் தொகை என்ற திருவருட்பயனுக்கு இணங்க ஆன்மாவானது மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கும். சுகர்மா என்பது நல்ல வினை. அவரது சுகர்மாவுக்கு ஏற்ப அவருக்கு நல்ல ஒரு பிராமண குலத்தில் பிறவி எடுப்பார்." (அவரது ஆத்மா சிவனது வீடான ஆத்ம லோகத்தில் இறைவனை அடைந்து அவர் முத்தி பெற பிரார்த்தனை செய்து முடிக்கிறேன்)

## திருமதி. வள்ளியம்மை சிவராசா
(ஓய்வுநிலை ஆசிரியை)

**கோவிந்தசாமி ரமண மகரிஷியின் இடவும்**

கூலிக் கெடுப்போன் குறித்தவிடங் கொண்டு போ
யேலக் சுமையை யிறக்கலெனச் - சாலச்
சிறக்குமெய்ஞ் ஞானியுமித் தேகச்சுமையை
யிறக்கியே சிந்தை மகிழ்வான்

(குருவாசகக் கோவை - 1141)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னப்பிள்ளை வாழ்வே வாழி...

நதிபாடும் மீனினம் நினைவிழந்து வாடுதம்மா
பதிபாடும் குரலெல்லாம் பதறியிங்கு புரளுதம்மா
சுதிபாடும் இசையெல்லாம் செயலிழந்து சோருதம்மா
விதிபாடும் வேதனைக்கு விளக்கங்கள் ஏதம்மா ?

விட்டனையோ நின்னுயிரை விட்டகலா வேதனையில்
தொட்டனையோ தெய்வீக தூயபணி போதனையில்
பட்டனையோ படுபாத பாவிகூற்றன் சோதனையில்
நட்டனையோ நற்சேவை நானிலத்தில் அம்மாவே !

அறிந்தவரும் கலங்குகிறார் அனைத்தவரும் ஏங்குகிறார்
எறிந்தவரும் உன்னழுகில் இமைவெட்டிக் கொட்டுகிறார்
செறிந்தவரும் செப்புகிறார் சிவசோதி நீயென்று
முறிந்தவரும் நாமானோம் அம்மையே மாரிமுத்தே !

அறியாமை போக்கிடவே ஆனபல சேவைகளை
குறியாகக் கொண்டு தினம் களித்தவவே மாரிமுத்து
நெறியாக நின்றெமக்கு நல்லபல சேவைகளை
செறிவோடு செய்ததனை செப்புதற்கு ஆகிடுமோ !

நீரதாய் நிலைபெருக்கி நீண்டதோர் நினைவில் நீயும்
தேற்றாநகர் வந்துதித்த அன்பர் அன்பே
வேரோடு சாய்ந்த சேதி வந்ததைக் கேட்டு நாங்கள்
சோரமே போனோமம்மா சுடர்முகம் காண்பதெப்போ ?

இல்லையென்ற வார்த்தைக்கு இடமேயின்றி
இல்லத்தில் வாழ்ந்தவளே இனிய அக்கா
நல்லவளே நற்சுடரே ஔவை அம்மே
வல்லவளே சின்னப்பிள்ளை வாழ்வே வாழி......!

**உதயம் விளையாட்டுக் கழகம்**
தேற்றாத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன்தாழ் பணிந்த திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா அம்மையார்

"இன்சொலால் ஈரம் அளைப்படிறு இலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்"

எனும் வள்ளுவரின் வாக்குக்கு அமைய அன்பு கலந்த வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள் இன் சொற்களாகும். இவ் அம்மையாரைக் கடந்த 2019 ஆம் ஆண்டு எனக்குச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எப்படியென்றால் இவருடைய ஏகபுதல்வனான தியாகராசா முருகவடிவேல் அவர்களை எனது தங்கை முறையானவருக்கு திருமணம் செய்தவகையால். அப்போது அவரை அவர் வீட்டில் எனது துணைவியாருடன் பார்த்தபோது அவருடைய கரத்தில் சுமார் மூன்று கிலோ எடை உடைய புத்தகம் ஒன்று வைத்திருந்தார். அப்போது நான் "அம்மா" என குரல் கொடுத்த போது அவர் எங்களை நிமிர்ந்து பார்த்தவர் இரு என்று கூறியவுடன் விபூதி எங்கு இருந்து எடுத்தார் என எனக்கு தெரியாது. எங்கள் நெற்றியில் பூசி ஆசி கூறி முத்தமிட்டுவிட்டு அதற்குப் பிறகுதான் எங்களை நீங்கள் யார் என்று குசலம் விசாரித்தார். பிறகு நாங்கள் எப்போது சென்றாலும் விபூதி பூசி ஆசிர்வதிப்பார்.

இவ்வாறான நிரம்பிய உள்ளம் கொண்ட பொக்கிஷம் எம்மை விட்டுச் சென்று விட்டது. மண்ணில் பிறந்ததால் என்ன என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அப்பணிகளைச் செவ்வனே சிறப்பாக செய்து முடித்து அமரத்துவம் அடைந்த தியாகராசா சின்னப்பிள்ளை அவர்களின் ஆத்மா இறைவனடி சேர வேண்டுமென்று முதலைக்குடா ஸ்ரீ பாலையடி விநாயகரையும் கண்ணகித் தாயாரையும் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சிவலிங்கம்**
முதலைக்குடா கொக்கட்டிச்சோலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா அவர்களின்

# நீங்கா நினைவுகள்

நமது கிராமத்து மக்கள் அனைவராலும் மாரிமுத்து அக்கா என்று அன்பாக அழைக்கப்பட்ட திருமதி.சின்னப்பிள்ளை தியாகராசா அவர்கள் இன்று நம்முடன் இல்லையென்னும் போது அவரது உடல் தான் இன்று நம்முடன் இல்லை. ஆனால் அவரது நினைவுகள் கிராம மக்களின் இதயங்களிலெல்லாம் பல தலைமுறைகளைக் கடந்தும் நீங்காமல் இருக்கும் என்பது திண்ணம்.

அமரர் சின்னப்பிள்ளை தியாகராசா அவர்கள் ஆற்றிய சமூக, சமய, ஆன்மீகப் பணிகள் பெண்களால் மட்டுமல்ல எந்தவொரு தனி மனிதனாலும் ஆற்றுவதற்கு அரிதானதாகும். அவர் சமய, ஆன்மீக வாழ்விற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் என்றால் அது மிகையாகாது. எமது கிராமத்தில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் எந்தவொரு விசேட நிகழ்வும் அவரது பங்களிப்பின்றி நடைபெறுவதில்லை. அவர் சித்தாந்த கோட்பாடுகளில் மட்டுமன்றி வேதாந்த கோட்பாடுகளிலும் ஆழமான அறிவும் புரிதலுமுள்ளவர். இதன் காரணத்தால்தான் அவர் 1993 ஆம் ஆண்டிலிருந்து அவரது இறுதிக்காலம் வரை தேற்றாத்தீவு ஸ்ரீ ரமணமகரிஷி ஆச்சிரமத்தின் நிரந்தர உறுப்பினராக இருந்தார். அத்துடன் ஆரம்ப காலத்திலிருந்து அவரது இறுதிக்காலம் வரை ஆசிரமத்தின் எந்த ஒரு நிகழ்விலும் பங்குகொள்ளத் தவறவில்லை. அதுமட்டுமல்லாது ஆச்சிரமத்தின் கட்டுமான பணிக்கு நிதி உதவி வழங்கவும் தயங்குவதில்லை.

அமரர் திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா அவர்களின் பெயரும் சேவைகளும் எமது ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமத்தின் வரலாற்றில் என்றும் நீங்கா இடம் பெறும் என்பது உறுதி.

"கூவிக் கொடுப்போன் குறித்தவிடங் கொண்டு போ
யெலச் சுமையை யிறக்கலெனச் - சாலச்
சிறக்குமெய்ஞ் ஞானியுமித் தேகச்சுமையை
யிறக்கியே சிந்தை மகிழ்வான்"

(குரு வாசகக் கோவை - 1141)

**சி. கோவிந்தசாமி**
(தலைவர் ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமம் தேற்றாத்தீவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ பக்தை
# சின்னப்பிள்ளை அக்கா

மீன்பாடும் தேனாடாம் மட்டுநகரின் கிழக்கே சுமார் 24 கிலோமீட்டர் தொலைவில் 64 அடி உயரமான கொம்புச்சந்தி பிள்ளையாரை முன்னிறுத்தும் ஊரான தேற்றாத்தீவினிலே 8.12.1985 அன்று கந்தப்பன் மாணிக்கபிள்ளை தம்பதிக்கு மகளாக பிறந்தவர்தான் சின்னப்பிள்ளை அக்கா.

இவர் சிறுவயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கி தமக்கு பிடித்தமான ஆசிரியர் தொழிலினை தனது 25 வயதினிலேயே பெற்று, சிறந்த ஒரு ஆசிரியராக திகழ்ந்தார். இவர் மாவடிவேம்பு அ.த.க பாடசாலை, தேற்றறாத்ததீவு அ.த.க பாடசாலை, முனைத்தீவு அ.த.க பாடசாலை, அம்பிளான்துறை றோ.க பாடசாலை, மாங்காடு றோ.க பாடசாலை, தேற்றத்தீவு சிவகலை வித்தியாலயம் போன்ற பாடசாலை களில் 17.10.1960 ஆம் ஆண்டு தொடக்கம் 29.6.1991 ஆண்டுதான் ஓய்வுநிலை அடையும் வரை தனது கல்விச் சேவையினை மாணவர்களுக்கு திறம்பட ஊட்டினார் என்பது அனைவரும் அறிந்ததே.

சின்னப்பபிள்ளளை அக்கா என்னை விட சுமார் 9 வயது அதிகம் கொண்டவர். அவர் ஆசிரியராக இருந்த போதிலும் அவரை நான் சின்னபிள்ளை அக்கா என்றே அழைப்பேன். அவர் அம்பிளாந் துறை றோ.க. பாடசாலையில் கல்வி கற்பித்தபோது தனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் சென்று வழிபடும் ஒரு சிவபக்தை என்பது அக்காலத்திலேயே எனக்கு நன்கு தெரியும். அதேபோல்தான் அவரது கணவர் தியாகராசா ஆசிரியரும் ஒரு தெய்வபக்தராவார். இருவரும் அம்பிளாந்துறை றோ.க. பாடசாலையில் கல்வி கற்பித்த வேளையில் இருவரும் தெய்வ பக்தியில் மிதமிஞ்சியவர்களாதலால் இருவருடைய மனமும் ஒன்றிணைந்து. 24.8.1973 ஆம் ஆண்டு தனது இல்லற வாழ்வைத் தொங்கினர். இல்லறத்தின் அடையாளமாக ஒரு மகனைப் பெற்று அவருக்கும் இறைவனின் பெயரான முருகவடிவேலன் என்னும் நாமம் சூட்டி மகிழ்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பிள்ளை அக்கா தனது ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுநிலை அடைந்தபின் நான் அவரை சந்தித்தது குறைவு. பின்னர் நான் ஓய்வு பெற்றபின் எங்களது ஓய்வூதியம் பெறுவோர் சேமநலச் சங்கத்தின் உறுப்பினராகவே அவரை மீண்டும் சந்தித்தேன்.

அவர் அன்றிலிருந்து இறக்கும் வரை தெய்வ பக்தியில் திளைத்தவர் என்பது அவரது நெற்றியில் அணிந்திருக்கும் விபூதியே சொல்லிவிடும். ''நீறில்லா நெற்றி பாள்'' என்பதற்கு ஏற்ற வாழ்ந்தவர் தான் சின்னப்பிள்ளை அக்கா. அவர் எப்போதுமே என்னிடம் சந்தோசமாகவும் பாசமாகவும் பேசுவார்.

எங்களது சங்கத்தில் உறுப்பினராக இருந்த அவரது சேவைக்காக பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி, பொதுக்கூட்டத்தில் கௌரவிக்கப்பட்டார்.

அவரது மரணச் செய்தி என்னை மனம் கலங்க வைத்தது. இறைவன்மேல் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்ட இவர் பொதுத் தொண்டுகளில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதோடு, பழகுவதிலும் இனியவர், கல்விக்காக வாழ்ந்த இவரது வாழ்வை நாமும் முன் மாதிரியாக கொள்வதுடன் இவரது ஆன்மா சாந்தியடைய உகந்தைமலை முருகனை பிரார்த்திக்கின்றேன்.

**சா. பரமானந்தம்** J.P
(ஓய்வு நிலை அதிபர்),
தலைவர் - ஓய்வூதியம் பெறுவோர் சேமநலச் சங்கம்
களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிய காணி ஒன்றை சிந்தை மகிழ வழங்கியவர்

நெற்றி நிறைந்த விபூதியோடும்
தூய வெண்ணிற ஆடையோடும்
சைவ மங்கையாகவே வாழ்ந்து
இறைபதம் எய்திய மாரிமுத்தக்கா
அவர்களுக் (அமரர் திருமதி.சி தியாகராசா )
எங்கள் இதயத்து அஞ்சலிகள்

அன்புடைமை அறநெறி சார்ந்த நல்வாழ்க்கை
பொன்ரார் சைவ நெறி என்றும் துகில்
வெண்புடவை எடுப்பில்லாமை என்பனவாம்
எங்கள் மாரிமுத்தக்கா தோற்றம்

இருபத்ததோழாண்டுகால இங்கீத ஆசிரியர் சேவை
ஒரு பத்தாண்டு கால ஊர் பாடசாலை சேவை
விருப்பொடு சைவம் தமிழ் விளக்க கற்பித்த
நல் அருமை ஆசிரியை ஆண்டவன் அடி சேர்ந்தார்.

ஆலய விழாக்களில் அக்காவின் சொற்பொழிவு
மூல விளக்கங்களோடு முக்கியம் பெற்று வரும்
சீலமுடன் பஞ்சபுராணம் சிறப்பாக ஒலிக்கும்
பாலகர்க்கும் பெரியோர்க்கும் பயனாகி நிற்கும்.

மாரியம்மன் சடங்கில் மகிமையுடனீடுபட்டு
பேசி சிரிய விளக்கம் வழங்கியதால் சின்னப்பிள்ளை
மாரிமுத்தக்கா என பெயர் மாற்றம் பெற்றாரோ
பூரிப்பாலெல்லாரும் பொலித்தயழைக்க ஆனது

ஊரின் மகா வித்தியாலயத்திற்கு மிக உவப்பான
சிரிய காணி ஒன்றை சிந்தை மகிழ வழங்கியவர்
பாரின் கொடை என்று பலரும் போற்றுகின்றனர்
நேரிய அவரின் சிந்தைக்கு நிச்சயமான ஓர் சான்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்ய குணவாளன் தியாகராசா அவர் மணாளன்
பௌவியமாய் பெற்றனர் பாலகன் முருக வடிவேல்
தெய்வாதீனமாக இரண்டு தைரிய அழகுப் பேரன்கள்
அவ்விருவர் அணைப்பில் அகமகிழ்ந்து வாழ்ந்தார்

இன்று எமைப் பிரிந்து இறைவன் பதம் ஏகினீர்கள்
என்றோ நாங்கள் எல்லோரும் தான் தொடர்வோம்
நன்மை செய்தாரை நானிலம் என்றுமே போற்றும்
அன்பாளன் இறைவன் அருகிருந்து சாந்தி பெறுக

ஓம் சாந்தி ....... சாந்தி.... சாந்தி ......

உங்கள் ஆத்மா இறையடி நிழலில்
நித்திய சாந்தி பெற
நமது பாலமுருகன் அருளினை வேண்டுகிறோம்.

**சபாரெத்தினம் குடும்பத்தினர்,**

தேற்றாத்தீவு மற்றும் பிரித்தானியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறு அன்னையாய் வாழ்ந்த மாமி

அன்பின் உறைவிடமாய் எமையெல்லாம்
அரவணைத்து ஒரு மாமியாய் இல்லாமல்
மறு அன்னை போல் நீ இருந்து
நான் வையத்து வாழ்கவென
வழிகாட்டியாய் நீ திகழ்ந்தாய்

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அஃது''
என்னும் பொய்யா மொழிக்கேற்ப
பொய்யின்றி மெய்யாக பண்புடனே வாழ்ந்தவளே

மாணவச் செல்வங்களின் எதிர்கால வாழ்வுக்கென
உன் வாழ்வின் பெரும் பங்கை அர்ப்பணித்து வாழ்ந்த நீ,
கல்விக்கோர் கலங்கரை விளக்கமாய்
எப்போதும் நீ இருந்தாய்

சமூக முன்னேற்றமது நற்கல்வியிலே உண்டென
ஆணித்தரமாக நம்பியதால் நீ உந்தன்
சொந்தக் காணியினை பலனேதும் பாராது
அர்ப்பணித்து உயர்ந்து நின்ற அற்புதத்தாய் நீங்கள்

பல கல்விப் பணி செய்து ஆன்மீக அறம் வளர்த்து
ஆலவிருட்சம் போல் பெரும்நிழல் தந்து வாழ்ந்தவளே
இந்த வையமது உள்ளவரை உந்தன் புகழுடம்பு
அழிந்தாலும் நின் அறப்பணிகள் ஒவ்வொன்றும்
எங்கள் அடுத்த சந்ததிக்கு உன் புகழைப் பாடி நிற்கும்
ஓம் .... சாந்தி .... சாந்தி .... சாந்தி .....

உங்கள் பிரிவால் துயருறும்

**கு. இரத்தினசபாபதி**

(கொக்கட்டிச்சோலை)

கல்லடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப் பற்றுடன் ஆசார முறையைக் கடைப்பிடித்து வாழ்ந்த அன்புத்தோழி

அன்பான மாரிமுத்துக்கு எனது கண்ணீர் அஞ்சலி உரித்தாகட்டும். நான் தம்பியின் (மகன்) வீட்டில் கொழும்பில் நின்ற போது, இந்தச் சோகச் செய்தியை கேட்டேன், வேதனைப்பட்டேன், சோகத்தில் ஆழ்ந்து கொண்டேன்.

"உறங்குவது போலும் சாக் காடு
உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு"

என்றார் வள்ளுவர்.

ஆரம்ப காலம் தொட்டு என்னுடன் ஒன்றாக கல்வி கற்று, சிறுவயது முதல் சமயம் மற்றும் ஆசார முறையையும் பின்பற்றினார். சின்னப்பிள்ளை என்பது பதிவு பெயர். செல்லமாக நாம் மாரிமுத்து என்று அழைப்போம். என்னுடன் மிகுந்து அன்பும், ஆதரவும் அவருக்கு உண்டு. என்மீது மிகவும் அன்புகாட்டிய தோழி என்றால் மிகையில்லை. அது மாத்திரமல்ல நெருங்கிய சொந்தக்காரியும்கூட, இளமைக் காலத்தில் பாடசாலையில் படிக்கும் போது மாணவர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் மலையிடை அருவி போல் மாசற்ற சொற்பொழிவுகள் ஆற்றுவார். கணீர் என்ற குரல்வளம். அத்தனை பேரும் அசந்து விடுவார்கள். ஆறாத சமயப் பற்றைத் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர்.

இதே போல அவரது வாழ்க்கைத் துணை தியாகராசா ஐயா அவர்கள் புதுமையின் சிகரம், பாசத்தில் பனிமலை, மாரிமுத்துக்கு ஒப்பான சமயவாதி. இருவரும் சந்தோசமாக வாழ்ந்தவர்கள். கோயில் பூசைகள், வழிபாடுகள் என ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முருகன் ஆலயமும், ஒவ்வொரு செவ்வாய்தோறும் பிள்ளையார் ஆலயமும் செல்வார். தனக்கு நடக்க முடியாத காலத்தில் கூட ஆலய வழிபாட்டை விட்டதில்லை. காப்பு விரதம் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பார். பிள்ளையார் காப்பு கதை பாடுவதை வழமையாக பின்பற்றினார்.

தேற்றாத்தீவு பாலமுருகன் ஆலயத்தில் சூரன் போர் காலத்தில் கந்தபுராணம் மாரிமுத்தாலேயே பாடப்பட்டு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தனது ஆத்மா ஈடேற்றத்திற்காக சமய தீட்சையும் பெற்றிருந்தார்.

இவரது வாழ்க்கையை செம்மைப்படுத்தும் முக்கியமான விடயம் கட்டாயம் நான் குறிப்பிட்டாக வேண்டும். மட்/தேற்றத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள தனது காணியை, மட்/தேற்றாத்தீவு மகா வித்தியாலய தொழில்நுட்ப பிரிவை ஆரம்பிப்பதற்காக அன்பளிப்பாக வழங்கினார். என் தோழியை கல்விக்காக செயற்கரிய சேவைசெய்த செம்மலென குறிப்பிட வேண்டும். தனது ஊர் மாணவர்களின் கல்வியில் அயராத அக்கறையும் ஆர்வமும் கொண்ட பெருமகள் எங்கள் மாரிமுத்து என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

இன்னும் எவ்வளவோ மாரிமுத்தைப் பற்றி கூறிக் கொண்டே போகலாம். வாழ்க்கைப் பயணம் குறுகியது. நாம் ஏன் இங்கு வந்தோம் என்பதை உணர்ந்து கொண்டு வாழ்வதே பெரியது. அர்த்தமுள்ள இந்துமதம் அதைக் கூறும். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

## திருமதி. அழகம்மா தம்பிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை)
தேற்றாத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆற்றல்களின் ஊற்று
# எங்கள் பெரியம்மா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" எனும் திருக்குறளுக்கு அமைய வாழ்ந்து இயற்கை எய்திய எங்கள் பெரியம்மா திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா அவர்களது சில நினைவுப் பதிவுகளை தங்களது சிந்தைக்கு விருந்தாக்குகின்றேன்.

இவர் அதிகாலை 3.00 மணிக்கு நித்திரை விட்டு எழுந்து மேலும் சுவாமிக்காக பூப்பறிப்பதாயின் தினமும் அதிகாலையில் பறித்து விட வேண்டும் எனும் கொள்கை உடையவர். ஏனெனில் பொழுது விடிந்ததும் பூக்களில் தேனீக்கள் மொய்த்து பூக்களை அசுத்தப் படுத்திவிடும் என்பதனால் ஆகும்.

உண்மையில் மாரிமுத்து பெரியம்மா எங்களுக்கு உறவாக கிடைத்தது மிகப்பெரிய பாக்கியம் ஆகும். தமது மன கஷ்டங்களை என்னிடம் கூறியே ஆறுதலடைவார். என்னிடம் கூறுவதற்கு என்று பல விடயங்களை வைத்துக் கொண்டு என் வரவிற்காக காத்திருப்பார். நான் அங்கு சென்றதும் சிற்றுண்டிகளும், தேநீரும் தந்து உபசரிப்பார். நான் மாத்திரமில்ல வேறு யார் அவர்கள் வீடு சென்றாலும் அனைவருக்கும் சிற்றுண்டிகளும் தேநீரும் வழங்குவது அவரது விருந்தோம்பலின் அடையாளமாகும்.

மேலும் தமது மகன் முருக வடிவேலுக்காக பெரியம்மா பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல போரதீவு பத்திரகாளி அம்மன் அருளால் தம்பி முருகன் பிறந்ததாகவும் பிரசவத்தை மேற்கொண்ட தங்கவடிவேல் வைத்தியரின் சேவை காரணமாகவும், முருகப்பெருமான் மீது கொண்ட பக்தி காரணமாகவும் மகனுக்கு முருகவடிவேல் என்று பெயரிட்டதாகவும் கூறுவார். அத்துடன் தமது மகன் O/L பரீட்சைக்காக படித்த போதிலும்சரி அதனை அடுத்த A/L பரீட்சைகளைப் படித்த போதிலும்சரி தமது நண்பர்களுடன் அவர்கள் வீட்டிலேயே இரவு நேரம் கற்கையில் ஈடுபடுவது வழக்கம். அப்போதெல்லாம் அடிக்கடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றூண்டிகளும் தேநீரும் வழங்கி ஊக்கப்படுத்தியதோடு நில்லாது அதிகாலையில் விழித்தெழச் செய்தமையும் நான் அடிக்கடி அசைபோட்டுப் பார்ப்பதுண்டு.

எமது தேற்றாத்தீவு மகா வித்தியாலயத்திற்காக இரண்டு காணிகளை இரு காலப்பகுதியில் வழங்கியுள்ளார். இரண்டாவது வளவுத்துண்டை கையளிக்கும் போது காலம்சென்ற செந்தில்நாயகம் அதிபரிடம் பெரியம்மா வைத்த நிபந்தனை தமது மகனின் அரசு தொழிலுக்கு உதவ வேண்டும் என கேட்டிருந்தார். செந்தில் ஐயாவும் உதவுவதாக வாக்களித்த போதிலும் அது நிறைவேறவில்லை. வருந்தினார். அப்போது மகன் முருகன் எந்த குறையும் இல்லாதபடி தனது தாய்க்குரிய சகல பணிவிடைகளையும் செவ்வனே செய்து வரலானார். இதனை அடுத்து தம்பி முருகனும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட பின்னர் மகனும் மருமகளுமாக பெரியம்மாவை சிறப்பாக பராமரித்ததும் குறிப்பிடத்தக்கது.

அது மாத்திரமின்றி எமது விபுலானந்தா அறநெறி பாடசாலையில் ஆத்திசூடி முதலான நீதி நூல்களை கதைகளின் மூலம் கற்பிப்பதில் வல்லவர். மேலும் நற்சிந்தனைக் கூறுதல், பஜனை செய்தல், தேவாரங்களை கற்பித்தல் போன்றவற்றிலும் முன்னோடியாக திகழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எங்கள் பெரியம்மாவுக்கு ஆலயங்களில் ஏடு படிப்ப தென்றால் அலாதிப் பிரியம். எமது கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதை படித்தல், ஏகாதசி புராணம் மற்றும் சிவராத்திரி புராணம் படித்தல் மற்றும் சிவபுராணம் படித்தல், பஜனை, சொற்பொழிவுகள், திருமுறை முற்றோதல்கள் போன்ற சகல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு தமது பேராற்றலை வெளிப்படுத்த தவறியதில்லை. அத்துடன் சித்திர புத்திரனார் கதை மற்றும் பிள்ளையார் கதை போன்றவற்றை தமது கைபட எழுதி எடுத்தமையும் வியந்து போற்றுதற்குரியது.

ஒரு சமயம் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை கூறியது பிள்ளையார் கதை படிப்பவர்கள் அவசியம் ஏட்டுச் சுவடியைப் பார்த்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க வேண்டும் அல்லது ஓலைச்சுவடியின் வடிவத்தில் மாதிரி பிள்ளையார் கதையை உருவாக்கி அதனையே படிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்த போது, எங்கள் பெரியம்மா சற்றும் சளைக்காமல் காலம் சென்ற சதாகரன் தம்பியின் உதவியுடன் சற்று கனமான மட்டையில் மாதிரி ஓலைச்சுவடிகள் போன்று ஒன்றை தயார் செய்து அதில் பிள்ளையார் கதையை எழுதி எடுத்தமையும் அதனை பாதுகாப்பாக வைப்பதற்காக சதாகரன் ஓர் மரப்பெட்டி செய்து கொடுத்தமையும் நினைவு கூறத்தக்கது. மேலும் எமது ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் கந்த சஷ்டி விரத காலங்களில் கந்தபுராண பாராயணம் நடைபெறுவது வழக்கம். இக்கந்த புராண பாராயணத்தை இருவர் சேர்ந்து செய்வது சிறப்பு. இதிலே எங்கள் பெரியம்மா கந்தபுராண பாடலை பாட அப்பாடலுக்கு காலம் சென்ற ஆறுமுகம் ஐயா அவர்கள் பயன் சொல்வது கேட்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும்.

மேலும் ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் சித்திரபுத்திர வீரர் தண்டு சித்திரபுத்திரனார் கதையை பாடுவதில் இரண்டு தசாப்த காலமாக ஈடுபட்டுவந்தவர் என்றால் அதில் எள்ளளவும் மிகையில்லை. இச்சித்திர புத்திரனார் கதையை காலை 8.30க்கு பாடுவதற்கு ஆரம்பித்தால் பிற்பகல் 3.00 மணியளவிலே நிறைவு செய்வார்.

தவராஜா அண்ணா மற்றும் புனிதவதி அக்கா ஆகிய இருவரையும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் வளர்த்து ஆளாக்கி ஆசிரியர் சேவையில் மிளிர்வதற்கு முன் நின்று உழைத்தவர் எங்கள் மாரிமுத்து பெரியம்மா ஆவார்.

மேலும், பெரியம்மாவுடன் அன்பாகவும் நட்பாகவும் இருந்தவர்களில் எமது கிராமத்தைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்த போது காலம்சென்ற திரு. செல்வராஜ கோபால் (ஈழத்துப் பூராடனார்) அவர்களும் அவரது துணைவியர் பசுபதிப்பிள்ளை அவர்களும் முதன்மையானவர்கள் அத்தோடு அவருடன் கற்பித்த திருமதி. அழகம்மா தம்பிப்பிள்ளை (மணியக்கா), திருமதி. வசந்தமாலா செல்வராஜா, திருமதி. மார்க்கண்டு, திரு. செல்வராஜா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சோ.யோகராசா மற்றும் தம்பி முருகனின் நண்பர்கள் முதலானோரை குறிப்பிட்டு கூறமுடியும்.

திருக்குறளில் ஓர் குறள் உள்ளது

"இடிப்பாரை இல்லா எமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

அதாவது தன் தவறுகளை எடுத்துரைத்து தன்னை திருத்துபவர் இல்லாத மன்னன் தன்னை அழிக்க வல்ல பகைவர் இல்லாமலே கெட்டழிந்து போவான் எனும் குறளுக்கு அமைய எங்கள் பெரியம்மா சிலரது தவறுகளை சுட்டிக்காட்டி அவர்களைத் திருத்த முற்படுவதனை சிலர் ஏசுவதாக நினைப்பதுண்டு.

எனவே இவ்வாறாக பன்முக ஆற்றல் படைத்த எங்கள் மாரிமுத்து பெரியம்மாவின் ஆளுமை பண்புகளை முன்மாதிரியாக கொண்டு செயல்படுவதை நாம் அவருக்குச் செய்யும் நன்றி கடனாகும். அவரது ஆத்மா இறைவன் அடியில் இன்புற்று இருக்க வேண்டும் எனவும் பிறவி இல்லாப் பெருவாழ்வை இறைவன் அவருக்கு வழங்க வேண்டும் எனவும் எல்லாம் வல்ல வைகுந்த வாசனை பிராத்திக்கின்றேன்.

**வீ. ரங்கநாதன்** (ஆசிரியர்)
தேற்றாத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனூரின் கல்விக்கு கரம் கொடுத்த கலையரசி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதற்கேற்ப பூமியில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று அமரத்துவம் அடைந்துள்ள திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா (மாரிமுத்தக்கா) அவர்களுக்கு தேற்றாத்தீவு மகா வித்தியாலய பாடசாலை சமூகத்தினர் ஆகிய நாம் இவரது ஆத்மா சாந்தி வேண்டி பிராத்திக்கின்றோம்.

மாரிமுத்து அக்கா என்றதும் என் மனக்கண்ணில் ஓடி வருவது இவர் பாடும் தேவாரப் பாடல்களும், இவரது சமயபேச்சுமேயாகும். எமது பாடசாலையில் கல்வி கற்று அரசியல் பணி புரிந்த பெண் ஆசிரியர்களில் முதன்மையானவர் இவரே. சமய விழாக்கள் எம் ஆலயங்களில் இடம்பெற்றால் அதில் அக்கா அவர்களின் சமய பயிற்சி கட்டாயம் இருக்கும். புராண வரலாற்று கதைகளைப் படித்து தேர்ச்சி பெற்றார் என்பதை இவரது பேச்சு என்றும் வெளிக்காட்டும். இவருடன் பேசிப் பார்த்தால் தெரியும் இவரது இறைபக்தி எப்பொழுதும் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பார்.


எமது தேற்றாத்தீவு கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் இவரது பங்களிப்பு அளப்பெரியது. அதாவது எமது பாடசாலையின் வரலாற்றுச் சான்றுகளிலே இவரது புகழ் ஓங்கி ஒலிப்பதை காணலாம். அதாவது இன்று இருக்கும் எமது தேற்றாத்தீவு கிராமத்தின் அறிவு கண்ணாக விலங்கு பாடசாலை காணியின் கிழக்கு புற வளவு இவரது பெற்றோர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டதாகவும் அதன் பின்னரே காணி விசாலமாக்கப்பட்டதாகவும் அறியப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள நிலையில் இன்று கணினிவள நிலையம் அமைந்துள்ள காணியானது. திருமதி சின்னப்பிள்ளை அக்கா அவர்களால் மீண்டும் அன்பளிப்பு செய்யப்பட்டு என் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதை யாருமே மறக்கவோ மறைக்கவோ முடியாது. இதனால் இவரது நினைவுச்சுவடுகள் புகைப்படம் எமது பாடசாலையின் அலுவலகம் சுவரில் இன்று வரை பேணி வருகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தேடும் பூமியில் அருள் தேடி வாழ்ந்த அன்னார் அவர்களுக்கு மீண்டும் என் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ... ஓம் சாந்தி .... ஓம் சாந்தி...

**பாடசாலை சமூகம்**
மட் / பட் / தேற்றாத்தீவு மகாவித்தியாலயம்





Digitized by Noolaham Foundation.

# உன் மகளாய் ஏங்குகிறேன் அன்ரி

அன்ரி என நான் அன்போடு அழைக்கும் போதெல்லாம்
தனமே என்றென்னை தாய் போல் அழைத்து நின்றாய்
சினம் உங்களை சிறைபிடிக்கும் வேளையிலே
மனம் போன போக்கில் தக்க மரியாதை குறைந்தொலிக்கும்

அண்ணன்மார் என்னை அகற்றி விட்ட வேளையில் – தவ
அண்ணனை எனக்கு பக்கத்துணையாக அனுப்பி வைத்தாய்
தாயை நான் இழந்து தவித்த போது உற்ற சேயாக என்னை
தாங்கி அரவணைக்க புனித அக்காவை அனுப்பினாய் அன்ரி

கண்ணாடி தொலைந்ததென்றா கண்மூடி தூங்குகின்றாய்
பண்ணோடு பாடிய வாய் இன்று மௌனம் காப்பது மேன்
வெண்ணீறனிந்த நெற்றி வெறுமையாய் ஆனதென்ன
விண்ணோர்கள் அழைப்பை ஏற்றா விடை பெற்று சென்றாய் அன்ரி

புன்னெறி வெறுத்து நின்றாய் புகழுரை ஏற்று வாழ்ந்தாய்
மன்னாதி மன்னரெல்லாம் பிடி சாம்பல் ஆவாரென்று
அந்நாளில் நீ உரைத்த அர்த்தம் புரிந்து கொண்டேன்
உன் மகளாய் ஏங்குகிறேன் உத்தமியே கண் திறவாய்

பெறாமகள் தனம், ரஞ்சினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனூர் சைவத்தின்
# கண்ணாகத் திகழ்ந்த மாரிமுத்து அக்கா

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது
அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு
நீங்கிப் பிறத்தல் அரிது"

மாரிமுத்து அக்கா! நீங்கள் பெண்ணாக பிறந்து
தேனூர் சைவத்தின் கண்ணாக திகழ்ந்தீர்
தியாகராசாவை மணந்து திருமுறைகளைத் தெளிந்தீர்
திருப்பணிகளை புரிந்து தியாகியாய் நடந்தீர்
இன்று அவன் அருளாலே அவன் தான் அடைந்தீர்

கண்ணால் நாம் கண்டதில்லை காரைக்கால் அம்மையாரை
உன்னால் தான் உணர்ந்திட்டோம் ஆலயத்து அறப்பணியை
பாலமுருகன் கோயிலிலே பாடும் பணி உங்களுக்கு – நீர்
பார்விட்டு போனதால் பால்மணமும் ஏழுதம்மா எங்களுக்கு
மாரிமுத்து ஊரின் பழம்பெரும் சொத்து
மாரி பொழிந்தாலும் மாரிமுத்து போயிருக்கும்
காரிருளில் கால்நடையாய் கட்டாயம் வந்திருக்கும்
கந்த சஷ்டி வேலையிலும் கதை சொல்லி கண்விழிக்கும்
கல்யாண பூசையிலே சீர் பேசி சிரிக்க வைக்கும் அக்கா!

ஆலயத்தில் நவக்கிரக அத்திவாரம் நீயமைத்தாய்
வித்தியாலயத்தின் வீரநடை போட நிலம் நீ கொடுத்தாய்
ஊரில் உள்ள கோயில் எல்லாம் உங்களுக்கு
உகந்த நல்ல ஆசான் நீங்கள் எங்களுக்கு

அக்கா!
ஆவலுடன் நீ இருந்தீர் குடமுழுக்கு காணவென்று
குமரன் உன்னை அழைத்து விட்டான்
அங்கிருந்து பார்ப்போம் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் இடமெல்லாம் பாலமுருகன் கோயிலிலே
நீயிருந்து பாடுவது நினைவொழிந்து போகதில்லே

அன்னை உன்னைக் காணோம் இனி
ஆரிடம் போய் ஐயம் தீர்ப்போம்
ஆண்டவனின் அடியினிலே ஆத்மா உந்தன் சாந்தி பெற
திண்ணமாக வேண்டி நிற்கும் சபை பரிபாலன சபையினர்

## ஸ்ரீ பாலமுருகன் ஆலயம்

ஆக்கம் : திரு. இ. ரவிச்சந்திரன்

### மானிட வாழ்க்கை ...

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதையொன்று வீழ்ந்திடில் செடி வந்துசேரும்

தென்றலும் பூக்களைத் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர்க் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 | 10 |
| 12 | 06 |
| 1935 | 2023 |

தேற்றாத்தீவு 1ம் குறிச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**அவர்கள் 2023.06.10 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற **தியாகராசா** (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான **கந்தப்பன் மாணிக்கப்பிள்ளை** ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான **ஏரம்பமூர்த்தி பொன்னம்மா** தம்பதியினரின் அன்பு மருமகளும் **முருகவடிவேலின்** பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான **பேரின்பராசா, நடராசா, சிவராசா** மற்றும் **தவராசா, புனிதவதி, ரஞ்சினி, பூமணி, ஞானசவுந்தரி, கிருஷ்ணபிள்ளை, பத்மசுந்தரி, புஸ்பராணி, நந்தினி, பிரகலாதன்** ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான **கண்ணம்மை, கந்தப்பெருமாள், பார்வதிப்பிள்ளை, நல்லம்மா, சின்னத்தம்பி** ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான **சின்னத்தம்பி, பிள்ளையம்மா, நல்லதம்பி, கணபதிப்பிள்ளை, அரிநேசராணி, சிவஞானம், வெள்ளத்தம்பி, புவனேசசிங்கம், வள்ளியம்மை, சிவகாமி** ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் **பேரின்பராணி, திகளேஸ்வரி, விபுலாநந்தன், மகேஸ்வரன், சுந்தரலிங்கம், குணசேகரம், மகேந்திரன், சோமாஸ்கந்தசுவாமி, இந்திரலிங்கம், வேல்நாயகம், நிமலதாஸன், கோகுலராமன், கலாவதி, இதயலக்குமி, இதயவேணி, தயாலட்சுமி, வாசுமர்சுந்தரி, சபாரெத்தினம், தற்பரானந்தம், ஜெகதீஸ், ஜெயகாந்த், சிறிகாந், மேகலா** ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான **இராசம்மா, நவமணி, ருக்மணி, கண்டுமணி, ஆத்தைப்பிள்ளை, காளியம்மை, கண்ணம்மை, சின்னத்தங்கம்** மற்றும் **மனோன்மணி, சிவமணி, சிவஞானரெத்தினம்** ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் **செல்லம்மா வைகாளிப்போடி, அழகம்மா வைகாளிப்போடி** ஆகியோரின் பெறா மகளும் **வேலுப்பிள்ளை பொன்னம்மாவின்** மருமகளும் **பிரதீந்தன், அக்சரண், கோபிகா, குகாசயன், சோபனகாந்** ஆகியோரின் அப்பம்மாவும் **ஹேமகர்ஷா, தீட்ஷாயினி** ஆகியோரின் அன்பு அம்மம்மாவும ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 2023.06.11ம் திகதி **ஞாயிற்றுக்கிழமை** பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு **தேற்றாத்தீவு** இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆழ்ந்த அனுதாபத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

கந்தப்பன்
+
மாணிக்கப்பிள்ளை
↓
கந்தப்பெருமாள்
கண்ணம்மை
பார்பதிப்பிள்ளை
நல்லம்மா
சின்னத்தம்பி
**சின்னப்பிள்ளை** →

ஏரம்பமூர்த்தி
+
பொன்னம்மா
↓
சிவஞானம்
புவநேசசிங்கம்
வள்ளியம்மை
சிவகாமி
**தியாகராசா** ↙



↓

**வடிவாம்பிகை**

**முருகவடிவேல்**
+
பேரின்பராணி
↓
**பிரதீந்தன்**
**அக்சரண்**

**காடோ செடியோ கடற் புறமோ கானமே மிகுந்த**
**நாடோ நகர்கடுவோ நலமே மிகுந்த வீடோ புறந்**
**திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம் நீடோய்**
**கழுக்குன்றி லீகா வுயிர்த்துணை நின் பதமே**

பட்டினத்து சுவாமிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

சிவனே ! சிவனே என்று சிந்தித்து
10.06.2023 இல் சிவனடி எய்திய
எங்கள் அன்புத் தெய்வம்
**அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தியாகராசா**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லம்
வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்
கிரியைகளிலும் தகனக்கிரியையிலும் கலந்து
கொண்டும் தொலைத்தொடர்பு, முகநூல்
மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
மலரஞ்சலி, மலர்வளையங்கள் சாத்தியோருக்கும்
பதாதைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள்
வெளியிட்டோருக்கும் பலவழிகளிலும் உதவிய
உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும்
உணவு தந்து உபசரித்த நல்லுள்ளங்களுக்கும்
இந் நினைவுமலரை சிறப்புற
அச்சிட்ட மாருதி அச்சகத்தாருக்கும் எமது இதயம்
கனிந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

- குடும்பத்தினர் -
தேற்றாத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையின் பாதை...

சோம்பலும் செயலிழந்த நிலையும்
கோழைகளுக்கே உரியது அவை உனக்கு வேண்டாம்.
பலவீனங்களை தூக்கியெறிந்து
வாழ்க்கைப் போராட்டத்துக்கு ஆயத்தமாகு.
துக்கங்கள் ஏற்படுவது விதி என்று கருதி
அடிபணிகின்றவன் பாவம் செய்கின்றான்.
எதிர்ப்பைக் கண்டு அடிபணியாதே,
போராடக்கற்றுக்கொள்.
ஓடி ஒளிந்துகொள்வது பிரச்சனைகளுக்குத்
தீர்வாகாது. எதுவந்தாலும் முனைப்போடு எதிர்கொள்.
உலகத்தைத் தலைகீழாக மாற்றக்கூடிய
சக்தி உனக்குண்டு. அதை வெளிக்கொண்டுவா.
இந்த தர்மயுத்தத்தை விட மேன்மைதரக்கூடியது
வேறு எதுவும் இல்லை.
இதில் உயிரை விடநேர்ந்தாலும் உயர்வேதான்.
தர்மயுத்தத்தில் இறக்கக்கூடியவனுக்கு உலகில்
எல்லாமே கிடைக்கும்.
கடமையில் இருந்து விலகுகின்றவன்
அனைத்தையும் இழக்கின்றான்.
செயலில் இறங்க ஆயத்தமில்லாத தனிமனிதனும்
சமுதாயமும் ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றன.
எனவே எழுந்து நில். எதிரிகளை தோற்கடித்து
வளமான இராஜயோகத்தை அனுபவி.
அழிவில்லாத வெற்றியை அடைவாய்.
நல்வாழ்வும் செல்வங்களும்
வீரனான உனக்கே உரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதி அச்சகம், களுதாவளை. 0778842223